மலர் - 03 இதழ் - 10 - ஏப்ரல் 2025

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி

நூலகர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் அமைந்த ஆதிச்சநல்லூர்
– முத்தாலங்குறிச்சி காமராசு

பதினெண் மேற்கணக்கு கீழ்க்கணக்கு நூல்கள் - பெயர்க்காரணம்
- பேராசிரியர் மு. முத்துவேலு

தென்திசையின் அகத்தியன்
– முனைவர் தே.மொழி

அறிவியல் வெற்றியா ? தோல்வியா ?
- பேராசிரியர் சம்பந்தம் ஏகாம்பரம்

நாகர் வழிபாடு – இருந்ததும் இருப்பதும்
– முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

இன்னும் பல

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர் - 03 இதழ் - 10
ஏப்ரல் 2025

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. "பாதை மாறிய ஆறுகள்" ஒரு பார்வை – ச.சபாரத்தினம் — 3
2. தென்திசையின் அகத்தியன் – முனைவர் தேமொழி — 7
3. பதினெண் மேற்கணக்கு கீழ்க்கணக்கு நூல்கள் – பெயர்க்காரணம் – பேராசிரியர் மு. முத்துவேலு — 9
4. *Tamil Heroic Poetry – Madurai Kanji – Dr. Mrs. C. Rajeswari,* — 13
5. அறிவியல் வெற்றியா? தோல்வியா? – பேராசிரியர் சம்பந்தம் ஏகாம்பரம் — 17
6. இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் அமைந்த ஆதிச்சநல்லூர் – முத்தாலங்குறிச்சி காமராசு — 21
7. நாகர் வழிபாடு – இருந்ததும் இருப்பதும் – முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி — 25
8. எளிய முறையில் யாப்பறிவோம்! – நெருப்பலையார். இராம இளங்கோவன் — 47
9. தவறின்றித் தமிழ் எழுதுவோம் – பி. டி. தானப்பன் — 51
10. "தமிழ்ப் பெயர்கள்" – மா.மாரிராஜன் — 57
11. வைணவம் வளர்த்த பெரியோர்கள் – திருக்கச்சி நம்பிகள் வைபவம் – தில்லி ஜனக்புரி சீனிவாசன் — 61
12. பாதரசம் – அண்ணாமலை சுகுமாரன் — 65
13. இலக்கிய உத்திகளும் எடிட்டிங் நுட்பங்களும் – எடிட்டர் தேவராஜ் — 67

"பாதை மாறிய ஆறுகள்" ஒரு பார்வை

ச.சபாரத்தினம்
புவியியலாளர், கோவை.

முன்னுரை:

தமிழ் மரபு அறக்கட்டளை என்னும் பன்னாட்டு அமைப்பு வெளியிட்ட நூல் "தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்" என்பதாகும். அதன் ஆசிரியர் மறைந்த ச. சிங்கநெஞ்சம் ஆவார். தமிழ் மரபு அறக்கட்டளையின் இணைய வழி இலக்கியக் கூடல் நிகழ்ச்சியில் அந்த நூல் குறித்துத் திறனாய்வு செய்தேன். அதில் நான் கூறிய கருத்துக்களை சுருக்கமாக இக்கட்டுரையில் பதிவு செய்யவிழைகிறேன்.

நூலாசிரியர்:

காலம் சென்ற திரு.ச.சிங்கநெஞ்சம் அவர்கள் 1973-1978 - ல் அண்ணாமலைப்பல்கலைக்கழக புவியியல் (Geology) துறையில் பயின்றார். இந்திய புவியியல் துறையில் (Geological Survey of India) பல்வேறு நிலைகளில் பணியாற்றி, இயக்குனராக ஓய்வு பெற்றார். தமிழார்வம் மிக்கவர். சிறந்த புவியியலாளர்.

நூல் :

இந்த நூலில் தமிழக நிலப்பரப்பில் பல ஆறுகள் எவ்வாறு தங்கள் பாதைகளை மாற்றிக்கொண்டன என்றும், அந்த நிகழ்வுகள் தொடர்பான செய்திகளையும், மேலும் பல அரிய தகவல்களையும் அளித்திருக்கிறார்.

பாலாறு :

பண்டைய இலக்கியங்களில் காணப்படும் பாலியாறும் இன்றைய பாலாறும் ஒன்றா என்ற கேள்வியை முன்வைத்து இல்லை என்று கூறினாலும், காவேரிப்பாக்கத்திற்கு மேற்கே வரை உள்ள பாலாறு அந்நாளில் பாலாறு என்று வழங்கப்பட்டிருக்கலாம். என்கிறார். அதேபோல் பழைய பாலாறு புதிய பாலாறு என்ற கொள்கைகளை முன் வைக்கிறார். கர்நாடக மாநிலம், நந்தி மலையினின்றும் இறங்கி வருவதால் பழைய பாலாறு, பாலியாறு என்று குறிப்பிடப்படுகிறது என்பதற்கு சேக்கிழாரின். திருக்குறிப்புத்தொண்ட நாயனார் பற்றிய பாடல்களில் ஒன்றைக்குறிப்பிடுகிறார்.



பாலாறு என்பது முதன்முதலில் கலிங்கத்துப்பரணி, பாடல் ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ராபர்ட் ப்ரூஸ் என்ற புவியியல் ஆய்வாளர், சென்னையே பழைய பாலாற்றின் கழிமுகம் ஆகும். இல்லையெனில் இவ்வளவு படிவுகள் இருக்காது என்கிறார். பின்னாளில் இவர் இந்திய தொல்லியலின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

அடுத்து ஆற்றுக்களவு *(RIVER PIRACY)* பற்றிக்குறிப்பிடுகிறார். இணையாக ஓடும் இரண்டு ஆறுகளில் அந்த நிலத்தின் காரணமாக ஒன்றில் துணை ஆறு தோன்றி அது மற்றொரு ஆறின் நடுப்பகுதியில் இணைகிறது. இந்த இணைப்பால், அந்த நடுப்பகுதி இணைப்பின் மீதமுள்ள பகுதி துண்டாகிவிடும். அது கைவிடப்பட்ட ஆற்றுப்பகுதியாக மாறிவிடுகிறது. இது போலவேதான் செய்யாறு பாலாற்றைக் களவாடிவிட்டது என்கிறார்.

பெண்ணை ஆறு :

சில ஆறுகள் தடம் மாறியதற்கு இலக்கியச் சான்றுகள் காட்ட முடியும். அதில் ஒன்று கடலூரில் கடலில் கலக்கும் தென்பெண்ணை ஆறு. சுந்தரமூர்;த்தி நாயனார், இறைவனைப்பித்தா என்று விளித்துப்பாடினார். பித்தா பிறை சூடி என்ற பாடலில்.

"வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட் துறையுள்" என்கிறார்.

இதன் பொருள் தென்பெண்ணை ஆற்றின் இன்றைய தென்பெண்ணை ஆறு, திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இன்றைய மலட்டாறுதான் பழைய பெண்ணை ஆறாக இருக்கலாம் என்று கூறுகிறார்.

கெடிலம்:

"கற்றுணை பூட்டிக் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

கடலூரில், கரையேறவிட்ட குப்பம் என்ற பகுதி கடலில் இருந்து 4 கி.மீ.தொலைவில் உள்ளது. இந்தப்பகுதிக்கடலில் இருந்துதான் திருநாவுக்கரசர் கரை ஏறி இருப்பார் என்பது ஒரு கோட்பாடு. ஆனால் அவர் கெடிலம் ஆற்றிலிருந்து கரை ஏறினார் என்று "கரையேர விட்ட நகர்ப்புராணம்" பாடல் கூறுகிறது. அந்தப்பாடலின்படி ஊருக்குத் தெற்கே கெடிலம்

ஆறு. ஆனால் அந்த கெடிலமோ இப்போது ஊருக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் ஓடுகிறது.

மாணிக்கவாசகர் தில்லை நடராசரைத் தொழுதபின் திருப்பாதிரிப்புலியூருக்கு வருகையில், இடையே கெடிலம் ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டது. அவர் ஈசனை வேண்ட கெடிலம் நகர்ந்து வழிவிட்டது, என்று ஒரு புராணக்கதை. ஆனால் இது ஏற்றுக்கொள்ளத்தாக இல்லை என்று நூலாசிரியர் கூறுகிறார்.

காவிரியும் கொள்ளிடமும் :

எல்லா இலக்கியங்களும், கவிதைகளும், திரைப்படப் பாடல்களும் காவிரியைப்பாடுகின்றன. கொள்ளிடத்தைப் பாடுகின்றனவா என்று கேள்வி எழுப்புகிறார் அகன்று பாயும் கொள்ளிடத்தை விட்டுவிட்டு குறுகலாக ஓடும் காவிரியை மட்டும் ஏன் பாடியிருக்கிறார்கள் என்று கேட்கிறார்.

காவிரியிலிருந்து முக்கொம்பு என்னும் இடத்தில்தான் கொள்ளிடம் பிரிகிறது. அங்கிருந்து வரும்போது முதல் தலம் திருவரங்கம். சிலப்பதிகாரத்தில், தன்னைக் காணவந்த மறையோனிடம் எந்த ஊர் என்று கோவலன் கேட்க, அதற்கு பதில் கூறும் பாடலில்

"விரிதிரைக்காவிரி வியன் பெரும் துருத்தி
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும் "

என்கிறார். இதில் துருத்தி என்றால் தீவு என்று பொருள் நாலாயிர திவ்யப்ரபந்தம் பாடல்களில்

"பொன்னி சூழ் அரங்கம்
காவிரி அரங்கம் மேய அண்ணலே"

"புனல் காவிரி சூழ் திருவரங்கமே" - இவ்வாறு எண்ணற்ற பாடல்களில் காவிரியே குறிப்பிடப்பட்டுள்ளது. சைவ வைணவ இலக்கியங்கள் எதிலும் கொள்ளிடம் குறிப்பிடப்படவில்லை. நீண்ட தேடுதலுக்குப்பின் இந்த நூலாசிரியர்

"கொள்ளிடக்கரை கோவந்த புத்தூரில்" என்ற திருநாவுக்கரசர் தேவராம் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார்.

கொள்ளிடக்கரையில் திருமழபாடி என்ற தலம் உள்ளது. "மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே" என்று பாடப்பெற்ற ஊர். சுந்தரர் காவேரியைக் கடந்தார் என்று தான்பாடல்களில்இருக்கிறது. ஒன்றுஅப்போது கொள்ளிடம் என்றஆறேஇருந்திருக்கிறது, அல்லதுதற்போதையகொள்ளிடம்தான்அப்போதையகாவிரியாகஇருந்திருக்கவேண்டும்.

திருச்சி மாவட்ட கெஜட்டில் (1902) மெக்லென்ஸ் என்பவர், காவிரியிலிருந்து கொள்ளிடம் 1500 ஆண்டுகளுக்கு முன் பிரிந்திருக்கும் என்கிறார். பேராசிரியர் சோம. ராமசாமி, தனது நூலில் 700 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. கொள்ளிடம்தான் இன்றைய

காவிரி என்கிறார். சிங்க நெஞ்சம் கூற்றுப்படி புதிய கொள்ளிடம், அதாது தற்போது இருப்பது 12ம்நூற்றூண்டுக்கும், 13ம் நூற்றூண்டுக்கும் இடையில் தோன்றியிருக்கக்கூடும்.

குடமுருட்டி :

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து நல்லூர் வரை, 40 கி.மீ. தூரத்துக்கு காவேரிக்கு இணையாக செல்லுகின்றது. குடமுருட்டி ஆறு. இந்த ஆறு தேவாரத்தில் பொன்னி என்றும் காவிரி என்றுமே குறிப்பிடப்பட்டிருப்பது சிந்தனைக்கு உரியதாகும்.

காவிரியில் துருத்திகள்:

துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்று அகராதி பொருள் கூறுகிறது. நீருக்கு மேல் துருத்திக்கொண்டு இருப்பதனால் துருத்தி ஆற்றில் உள்ள தீவு என்று பொருள். வடமொழியில் 'ரங்க" என்றாலும் இதே பொருள்தான். காவிரியில் எத்தனையோ துருத்திகள் இருந்தாலும் ஊரே அமையக்கூடிய துருத்தியர் இருந்தவை ஐந்து. அதில் தற்போது மூன்றே உள்ள மூன்றில் ஒன்று திருவரங்கம் மீதி இரண்டும் கர்நாடகத்தில் உள்ளன.

முடிவுரை:

ச.சிங்கநெஞ்சம் நூலின் எல்லாக்கருத்துக்களையும் இக்கட்டுரையில் கொண்டு வருவது என் நோக்கம் அல்ல. கல்லணையைக்கட்டியது யார்? காவிரியின் சேய் அரிசிலாறு, வெண்ணாறாக மாறிய வெண்ணி, ஐயாறு பற்றிய ஒரு ஐயம், இவ்வாறு பல செய்திகளை இதில் அலசியிருக்கிறார். அனைரும் படிக்க வேண்டிய நூல் இது.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

தென்திசையின் அகத்தியன்

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

நல்லந்துவனார் எழுதிய பரிபாடலில் 'பொதிகை முனிவனின்' பெயர்கொண்ட "அகத்தியன்" என்னும் விண்மீன் குறிப்பிடப்படுகிறது. அகத்திய விண்மீன் தன் உயர்ந்த இடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர, விரிந்த கதிர்களையுடைய வேனிற்காலம் எதிர்கொள்ளும் கார்காலத்தில் மழை பெய்க . . . ' என்று இப்பாடலுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் தருகிறார்கள்.

"பொதியில் முனிவன் புரை வரை கீறி
மிதுனம் அடைய விரி கதிர் வேனில்
எதிர் வரவு மாரி இயைக"
[பரிபாடல்: 11 - வையை; நல்லந்துவனார்]

அகத்தியன் *(star - Canopus)* என்ற விண்மீனை, பொதிகை மலையில் வாழ்ந்தாகக் குறிப்பிடப்படும் அகத்தியனுடன் தொடர்பு படுத்திக் கூறும் தமிழின் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் குறிப்பு இது ஒன்றேயாகும்.

கனோபஸ் *(Canopus)* என்னும் அகத்திய விண்மீன் புவியின் தென் திசையின் மிகத் தொலைவில் உள்ள விண்மீன் என்பதால் புவியின் தென்கோளத்தில் உள்ளவர்களால் காண இயலும். குறிப்பாக நிலநடுக்கோட்டிலிருந்து *37°18'* பாகைக்கும் வடக்கே உள்ள பகுதியில் *(Northern Hemisphere's 37th parallel north)* வாழ்பவர்களால் அகத்திய விண்மீனைக் காண இயலாது. கிரேக்கத்திலும் ரோமிலும் உள்ளவர்களால் வானில் கனோபஸ் விண்மீனைக் காண இயலாது, ஆனால் அவர்களுக்கும் தெற்கே உள்ள எகிப்தியர்களால் காண இயலும். பண்டைய ரோம் நாட்டு எழுத்தாளர் மூத்த பிளினி *((Pliny the Elder)*

இந்தியக் கடலின் தென்பகுதி மக்களுக்கு இரவில் கடல் பயணத்தில் வழிகாட்ட உதவும் விண்மீன் என கனோபஸ் விண்மீனைக் குறிப்பிடுகிறார்.



அகத்தியர் தென்பகுதிக்கு வந்த புராணக் கதைக்கும் இதற்கும் தொடர்பு இருக்கக் கூடும். ஆரிய ரிக் வேதத்தில் கூறப்படும் 7 முனிவர்களில் (சப்த ரிஷிகள்) அகத்தியர் ஒருவர் அல்ல. ஸ்டெப்பி புல்வெளி ஆரியர்கள் தென் பகுதி நோக்கி புலம் பெயர்ந்து வந்த பிறகே தென் திசையின் ஒளிமிக்க விண்மீனை அறிந்திருக்க வேண்டும், ரிக் வேதத்தில் பாடல்கள் எழுதிய மற்றொரு முனிவரான அகத்தியர் என்பவரைச் சிறப்பிக்க அந்த விண்மீனுக்கு அகத்தியர் பெயரைச் சூட்டி இருக்க வாய்ப்புண்டு. அகத்தியர் தென்திசைக்குரியவர்என்ற புராணப்புனைவுகளும்அதன்அடிப்படையில்தோன்றியிருக்க வேண்டும். ஒரு விண்மீன் தெளிவாக வானில் தெரியும் என்றால் அது குறித்த பண்டைய தொன்மக் கதைகளும் உருவாகி இருக்கும். சீனர்கள் கனோபஸ் விண்மீனை 'தென் துருவத்தின் முதிய மனிதன்' (Old Man of the South Pole) என்று குறிப்பிடுவார்கள். அறிவியல் படி அகத்தியருக்கும் தென்திசைக்கும் உள்ள தொடர்பு இதுவே.

குறிப்பு: நிலநடுக்கோட்டிலிருந்து 37°18' பாகைக்கும் வடக்கே உள்ள பகுதிக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. கோடைக்காலம் தவிர்த்து, இப்பகுதியிலும் அதற்கு வடக்கிலும் சூரியக் கதிர்கள் விழும் கோணமும் அளவும் மாறுபடும். இப்பகுதிகளில் ஓசோன் மண்டலத்தைக் கடந்து ஊடுருவி வரும் UVB புற ஊதாக் கதிர்களின் அளவும் மிகக் குறைவு. இதனால் வைட்டமின் D குறைபாடு ஏற்படும் என்பதால், அதை நிவர்த்தி செய்ய இப்பகுதியில் வாழ்பவர்கள் உடலில் இயற்கையாக மரபணு மாற்றங்கள் நிகழ்ந்து, 'மெலானின் நிறமி' (Melanin pigment) அளவில் மாற்றம் ஏற்பட்டுத் தோல் நிறம் வெளிரும் பரிணாம வளர்ச்சி நிகழ்ந்தது.

கனோபஸ் விண்மீன் சூரிய மண்டலத்திலிருந்து 310 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. சூரியனை விடவும் ஒளி மிக்கது, அளவிலும் மிகப் பெரியது. நாம் காணும் வானில் இரண்டாவது ஒளிமிக்க விண்மீன் இதுவே (ஒளிர்வதில் முதல் இடத்தில் இருப்பது 'சிரியஸ்' எனப்படும் விண்மீன் (Sirius); சிரியஸ் புவிக்கு மிக அருகில், 8 ஒளியாண்டுகள் தொலைவில் இருப்பதால் கனோபஸ் விண்மீனைவிட ஒளிமிக்கதாகத் தெரிகிறது.)

பதினெண் மேற்கணக்கு கீழ்க்கணக்கு நூல்கள் – பெயர்க்காரணம்

பேராசிரியர் மு. முத்துவேலு
முதல் பதிவாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கிய நூல்களைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று அழைக்கிறோம். நாலடி நானாற்பது எனத் தொடங்கும் பழம்படம் வரிசைப்படுத்துகிற பதினெட்டு நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்கிறோம். பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்றும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் அழைப்பதற்கு மரபு வழியாக ஒரு காரணம் சொல்லப்பட்டு வருகிறது.

இவற்றில் அமைந்திருக்கும் பாடல் அடிகளின் எண்ணிக்கை வைத்தே இந்தப் பகுப்பு உண்டாக்கப்பட்டது என்பது அதற்குச் சொல்லப்படும் காரணமாகும். . அந்தக் காரணம் பொருத்தம் உடையதா என்பதை ஆராய்வது தான் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

பதினெண் மேற்கணக்கு நூல்களில் இடம் பெற்றிருக்கிற பாடல்கள் ஒவ்வொன்றும் நீண்ட அடிகளைக் கொண்டவை. இவை மூன்றடி ஆசிரியப்பா முதல் பத்துப்பாட்டில் ஒன்றான 780அடிகளைக் கொண்ட மதுரை காஞ்சி வரை நீண்ட பாடல்களை உள்ளடக்கியவை. எனவே நீண்ட அடிகளைக் கொண்ட பாடல்களால் ஆன தொகுப்பு என்பதால் இது மேற்கணக்கு நூல் என்று தொன்று தொட்டு அழைக்கப்பட்டு வருகிறது.

இரண்டு அடி முதல் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆன பாடல்களைக் கொண்ட தொகுப்பு என்பதால் இந்தத் தொகுப்பு பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் அழைக்கப்படுவதாக உரையாசிரியர்களின் விளக்கங்கள் வழி நாம் அறிந்து கொள்கிறோம்.

எனவே மேல்கணக்கு என்பது அதிக அடிகளைக் கொண்ட பாடல் என்றும் கீழ்க்கணக்கு என்பது குறைந்த அடிகளைக் கொண்ட பாடல் என்றும் இதுவரையில் நாம் பொருள் விளக்கத்தை கண்டு வருகிறோம். பாடல்களின் எண்ணிக்கையை வைத்து மட்டும் இந்தப் பகுப்பு இருந்திருக்குமானால் அதற்கு பெயர் வேறாக அமைந்திருக்க வேண்டும். இவ்வாறு அதிகப்படியான பாடல்கள் கொண்ட நூல் என்பதைக் குறிப்பதற்காக இருக்குமானால் அதற்குப் பெயர் மேல் என்பதற்குப் பதிலாக பெருங்கணக்கு என்று அமைந்திருக்க வேண்டும். அதைப் போலவே குறைந்த பாடல் அடிகளைக் கொண்ட நூல் என்பதைக் குறிப்பதற்குக் கீழ்

கணக்கு என்பதற்குப் பதிலாக அதனைச் சிறு கணக்கு நூல்கள் என்று அமைத்திருக்க வேண்டும்.

பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படை நூல்களான பெரும்பாணாற்றுப்படை சிறுபாணாற்றுப்படை என்னும் இரண்டு நூல்கள் உள்ளன. இந்த நூல்களுக்குப் பெயரிடுகிற பொழுது அந்தப் பாடல்களில் வருகிற பாணர்கள் தங்கள் கைகளில் வைத்து இசைக்கின்ற கருவியான யாழில் அமைந்திருக்கிற நரம்புகளின் எண்ணிக்கை வைத்து பெயரிடப்பட்டன என்று அறிகிறோம் அதிகப்படியான நரம்புகளை உடைய யாழாக இருந்தால் அதனைச் பேரியாழ் என்றும், குறைந்த நரம்புகளை உடைய யாழாக இருந்தால் அதனசைச் சீறியாழ் என்றும் அழைத்தனர்.

எனவே பேரியாழைக் கையில் வைத்து இசைத்துப் பாடுகின்ற பாணனைப் பற்றிய நூலானதால் பெரும்பாணாற்றப்படை என்றும்,சீறியாழைக் கையில் வைத்துப் பாடிய பாணனைப் பற்றிய நூல் என்பதால் சிறுபாணாற்றுப்படை என்றும் அழைக்கப்படுகின்றன..

இந்த ஒப்புமையாக்கத்தின்படி தான் நாம் மேல்கணக்கு நூல்கள் என்பதையும் கீழ்க்கணக்கு நூல்கள் என்பதையும் நாம் அணுக வேண்டியுள்ளது.

பாடல் அடிகளின் எண்ணிக்கையை வைத்துப் பெயர் அமைந்திருக்குமானால் அது, '' பதினெண் பெங்கணக்கு நூல்கள்'' என்றும் பதினெண் சிறு கணக்கு நூல்கள் என்றும் அமைந்திருக்க வேண்டும். இந்த முறைமையில் நூல்களின் தொகுப்புக்கான பெயரிடப்படவில்லை என்பது உறுதியாகிறது. எனவே நாம் இதுவரை அறிந்து வந்த காரணம் பொருத்தமானதாக இல்லை என்பது புலப்படுகிறது. எனவே இதற்கு வேறு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும் என்பதையும் நாம் உய்த்துணர வேண்டும்.

பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பவை காலத்தால் முந்தியவை என்பதும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் பிந்தியவை என்பதும் நாம் அறிந்தவை தான். அந்த வகையில் இந்த நூல்களுக்குப் பெயரிடுகிற பொழுது காலத்தின் வரிசையையும் காலத்தின் முதுமையும் மூத்த தன்மையையும் காலத்தின் பிந்திய தன்மையும் இளமையையும் சுட்டுகின்ற ஒரு விளக்கத்தைத் தருவதாக இந்த பெயர்கள் அமைக்கப்பட வேண்டும் என்று முன்னோர்கள் கருதி இருக்கலாம்.

அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் காலத்தால் முந்தியே நூல்களுக்குப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்றும் காலத்தால் பிந்திய நூல்களுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் பெயரிட்டுள்ளார்கள்.

எனவே காலத்தால் முந்தியதை மேல் என்றும் காலத்தால் பிந்தியது கீழ் என்றும் அழைக்கும் மரபு தமிழில் இருந்திருக்கிறதா என்பதை ஆராய்வதும் பொருத்தம் உடையதாகிறது.

இத்தகைய ஆய்வுக்கு இலக்கியச் சான்றுகளை விட தமிழரின் வாழ்வியல் மரபுகள் நமக்குத் துணை நிற்கின்றன

தமிழர் தம் பண்பாட்டு மரபில் மேல் என்பதற்கும் கீழ் என்பதற்கும் வெவ்வேறு பொருள்கள் உள்ளன.

மேல் என்பதற்கு மூத்தது என்பதும் கீழ் என்பதற்கு இளையது என்பதுமே அந்தப் பொருட் சிறப்பாகும்.

தமிழர் வாழ்வியல் செய்திகளை உற்று நோக்கும்போது மேல் என்பது மூத்தது என்ற பொருள் நமக்குப் புலப்படும்.

ஒரு தந்தைக்கு இரண்டு ஆண் மக்கள் இருக்கிறார்கள் என்னும் இடத்து, தந்தைக்கு மேற்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றும் என்றும் இரண்டு வீடுகள் அடுத்தடுத்து இருக்குமானால், சொத்துக்களைப் பிரிப்பதற்கான பாகப்பிரிவினையின் போது மூத்த மகனுக்கு மேற்கில் உள்ள வீடும் இளைய மகனுக்குக் கிழக்கில் உள்ள வீடும் பிரித்துக் கொடுக்கப்படும்.

இதைப் போலவே ஒரு நிலம் மேற்குக் கிழக்காக இருக்குமானால் தந்தையின் இரு பிள்ளைகளுக்கு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு அந்த நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமானால், மேற்கில் உள்ள பகுதி குடும்பத்தில் மூத்தவனுக்கும் அவனுக்கு இளையவர்களுக்கு அதற்கு அடுத்தடுத்த கிழக்குப் பகுதிகளும் பிரித்துக் கொடுக்கப்படும்.

இதுதான் தமிழர் வாழ்வியல் வழி வந்த மரபாகும். எனவே மேற்கு என்பது வயதில் மூத்தவனுக்கு உரியது என்பதும்,கிழக்கு என்பது வயதில் இளையவனுக்கு உரியது என்பதும் தொன்று தொட்டு இருந்து வரும் மரபாகும்.அது நிலமாக இருந்தாலும் வீடாக இருந்தாலும் பாகப்பிரிவினையின் போது மேற்கு (மேல்) என்பது மூத்தவனுக்கும் கிழக்கு (கீழ்) என்பது இளையவனுக்கும் உரிய சொத்தாகத் தமிழர் மரபில் இருந்து வருகிறது. இந்த மரபினை ஒட்டித்தான் மேல் என்பது காலத்தால் மூத்தது என்னும் பொருளையும் வைத்து கீழ் என்பது காலத்தால் இளையது என்னும் பொருளையும் வைத்து மேற்கணக்கு என்பதைக் காலத்தால் முந்தியது என்றும் கீழ்க்கணக்கு என்பது காலத்தால் பிந்தியது என்னும் கருத்தை நம் முன்னோர்கள் புலப்படுத்தி உள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

எனவே மேல் கணக்கு,கீழ்க்கணக்கு என்பது அடிவரையறையின் அடிப்படையில் அமைந்த விளக்கமல்ல.அது காலத்தின் அடிப்படையில் கால மூப்பின் அடிப்படையில் அமைந்த பெயர்கள் என்பதை நாம் தெளிவாக உணர்கிறோம்.

கணக்கு நூல்கள் என்ற பெயரின் காரணத்தையும் நாம் அறிந்து கொள்ள வேண்டி இருக்கிறது. காலத்தால் முந்தியே,''பதினெட்டு இலக்கிய நூல்கள்'' என்ற பொருளைச் சுட்டுவதற்காகவே பதினெண்மேல் கணக்கு என்னும் தொடர் ஆளப்பட்டுள்ளது என்று அறிகிறோம். இங்கே.கணக்கு என்பது இலக்கியங்கள் என்னும் பொருளைச் சுட்டப் பயன்பட்டுள்ளது. அவ்வாறெனில் கணக்கு என்னும் சொல்லுக்கு இலக்கியம் என்னும் பொருளைச் சுட்டுவதற்குத் தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்தல் கட்டாயமாகிறது.

சங்கப் புலவர்களில் ஒருவர் பெயர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரன் என்று வருகிறது. இங்கே கணக்காயன் என்னும் சொல்லுக்குப் புலவர், இலக்கிய ஆசிரியர் என்பது பொருளாகும். கணக்காயர் என்பது இலக்கியங்களை இயற்றுகிற புலவருக்கு ஆகி வந்த பெயராக இருக்கும்போது, கணக்கு என்பது இலக்கியத்தைச் சுட்டுவதற்கான பெயர் என்பது புலப்படுகிறது.

மேலும் திருவள்ளுவர் கல்வி என்பதை இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறார்.எண்ணும் எழுத்தும் கல்வி என்பதற்கு அடையாளமாகக் கூறுகிறார்.

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணெனப வாழும் உயிருக்கு" - என்பது குறள்

இக் குறளில் வரும் எண் என்பதும் எழுத்து என்பதும் இன்றைய நாளில் பொருள் கூறுவது போல அவை கலையையும் அறிவியலையும் குறித்த சொற்களாகத் திருவள்ளுவர் காலத்தில் வழங்கப்படவில்லை.வள்ளுவர் காலத்தில் கல்வி என்பது இலக்கியத்தையும் இலக்கணத்தையும் மட்டுமே குறித்த சொல்லாகும். எனவே எண் என்பது இலக்கியம் என்பதையும் எழுத்து என்பது இலக்கணம் என்பதையும் சுட்டுவதாகக் கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கணத்தின் மூத்த நூலான தொல்காப்பியதின் முதல் நூற்பா எழுத்தெனப்படுப அகரம் முதல் எனத் தொடங்குகிறது

இதுவே எழுத்து என்பது இலக்கணத்தைக் குறிப்பதாகக் கொள்ளுவதற்குச் சான்றாக அமைகிறது. இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் தோன்றியிருக்க வேண்டும். இலக்கணம் என்பது எண்ணெய் என்றால் இலக்கியம் என்பது எள் என்பதுதான் உரையாசிரியர்கள் நமக்கு எடுத்துக் காட்டாகத் தந்து விளக்குகிறார்கள்.. எனவே திருக்குறளில் எழுத்துக்கு முன்னால் வருகிற எண் என்பது இலக்கணத்திற்கு முந்திய இலக்கியத்தைக் குறிக்கிற சொல்லாகவே இருக்க முடியும். எனவே எண்ணும் எழுத்தும் என்பதில் வள்ளுவர் குறிக்க வந்த கல்வியானது இலக்கியத்தையும் இலக்கணத்தையும் குறிப்பதாக் கொண்டால், எண் என்பது கணக்கு என்பதற்கு இணையான சொல்.எனவே எண் என்பது இலக்கியம் என்று பொருளில் அமைந்துள்ளது. இன்றும் கணக்குக்கு அடிப்படை எண்கள் என்பதை அறிவியல் சுட்டுகிறது கணிதத்தின் உச்சநிலையாக காணப்படுகிற இன்றைய கணிப்பொறியும் டிஜிட்டல் என்ற ஆங்கிலச் சொல்லால் எண்மம் என்பதைத்தான் உணர்த்துகிறது.

இதனால் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பன காலத்தால் முந்திய அதாவது சங்ககாலத்துப் பதினெட்டு இலக்கிய நூல்கள் என்பதன் பெயராக்கம் என்பதையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பன காலத்தால் பிந்திய சங்கம் மருவிய காலத்துப் பதினெட்டு இலக்கிய நூல்கள் என்பதன் பெயராக்கம் என்பதையும் அறிந்து மகிழலாம்.

Tamil Heroic Poetry – Madurai Kanji

Dr. Mrs. C. Rajeswari,
Translator, Writer and Publisher, Madurai

Heroic poetry is the earliest form of poetry in human history. There are two types of it namely Bardic poetry and Court poetry. Both are narrative in style describing the victory or a defeat of an aristocratic ruler or the brave activities of a valiant warrior, a chieftain etc. Bardic poetry is totally oral in nature, they are songs composed by bards and sung in front of donors and rulers to praise them. They are accompanied with few men to sing a chorus or repeat few words or phrases or lines of praises. They sung or recite with the help of a stringed instrument, harp or any of that kind. This bardic poetry was common in Classical languages like Tamil and Greek. But Tamil is proud to possess written form of literature far before Greek. Recent Tamil excavations has thrown new light on the antiquity of Tamil culture and civilization. The history of Tamil language ranks up to 16th century BC as writings are found in pots and other artefacts dug out in archeological site. The Trojan war took place in 12th century BC but written in 8th -9th century BC only. So it has taken many centuries to record the history as a manuscript, till then it was orally recited.

Bards are illiterates and they didn't write anything they sang in front of kings. In Tamil the ten Idylls and the eight anthologies are enriched with heroic poetry. They are not bardic poetry but court poetry. Poets of that period had an association called Kuudal to develop the language and literature of Tamil. So poets composed poems in narrative style on praise of the kings, came to their royal court and sung in front of them. So in ancient Tamil Literature, court poetry is found in the the assiriya ppaa metre which is exclusively used for narrative style in singing poems of love and war. For love poems Paripadal and kalippaa were also used but only in one text, each, whereas all other texts are in assiriyappaa. So just like dactylic hexameter is used in Greek epics, aassiriya ppaa is a common metre for ancient classic Tamil poetry. Gilgamesh epic and Iliad and Odyssey of Greek are written forms of oral poetry. In Tamil literature the idylls and single poems are directly written by poets and not orally recited by bards for centuries and later penned by poets.

Roman and Latin epics followed the Greek metre but the old English changed it to alliterative verse in its Beowulf. In 1380 Geofrey Chaucer in his Canterbury Tales introduced iambic pentameter a rhyming couplet. C. S. Lewis named it as 15th

century heroic meter. From 1640 to 1790 this heroic couplets were in use. They were a pair of lambic pentameter lines that rhymed together. [In this translation of Madurai Kanji most of the lines are in a rhyming couplet style, but not intentionally tried.] this lambic pentameter is called as heroic quatrain or elegiac quatrain as the case may be.

Madurai Kanji is an idyll of 772 lines, the longest poem of that period, praising the Tamil king Nedunchezhiyan of Pandya dynasty, who marched to the north, waged war on the Aryans and defeated them. His warfare, every day activities, sounds heard in his headquarters Madurai [the ancient city still functions as a head quarter of a district, a city rich in heritage and culture,] different places of worship for different religions, battle fields, export, import activities in the sea ports, market places in day and night [till date Madurai has both markets, loading and unloading takes place round the clock and the city is called as Venice of the East and a Sleepless City]. This idyll is in a narrative style, no dialogues but woven in a dramatic layout. It proves to be a portrait of Madurai city with flourishing culture and civilization. The city plan is detailed and the people's life is explained. Markets and worship places reflect their economic and religious status, dance and singing show the artistic taste in life. Food and liquor intake declare their fitness and health and the logic behind continuous wars waged by them and capturing lands from south to north.

Generally a heroic poetry is presented in an objective and impersonal manner. It praises the hero or the ruler his lineage, clanogeny and his lifetime achievements. These are described for artistic purpose and not historically or chronologically presented. Hyperbolic expressions are common in heroic poetry. The birth and death of the hero is explained to give him an image more than an ordinary man. In Tamil, the death of Athiyamaan, a brave chieftain, is lamented and sung by poetess Avvai. She has also sung a song on this chieftain coming to meet his new born infant, with red fiery eyes and blood stained weapons to inspire his little boy and celebrate his birth. When Saathan of Ollaiyur passed away the poet composed a poetry of lamentation asking a climber 'why did you blossom in this Ollaiyur land when no man or woman will pluck you to make wreaths and garlands?' All these heroic poetry features are found plenty in Tamil ancient classic literature. These type of small poems later developed to a story with many other stories and incidents added to it.

Dr.K.Kailasapathy who discussed on the Tamil Heroic Poetry has enlisted various salient features. Those characteristics are given with examples from Madurai Kanji. For few common features no examples are given.

1. Narratives told on their sake,

2. Connected with the heroic age of the past

[1] Oh Lord

You hailed from the reputed progenitors

Who had ruled this land for billion years

So good fortune at your foot prevails

And your land is rich and prosperous

[2] Oh King like your predecessor

Nilam tharu thiruvil Pandyan

A patron of Tamil language

Had a big club for Tamil poets

To discuss and develop literature

As per their mentors orders

3. Factual detailed descriptions – Noun - adjective combinations –

On high peaks bee hives hang

On fragrant hills in land expanse

Red hot sun for the daylight

While cool moon for black night

4. Repeated lines and themes

Repeated lines are not found but themes are found. Mostly they are warfare activities and descriptions of Madurai city.

[1] Ghostesses danced holding their hips

Rising headless corpses joined this

Brave bold and fierce for their foes

Ghostess' bangled hands as oars

Stirred the boiling meat and rice

Server followed the protocol nice

[2] He won two emperors and petty kings

Still not satisfied and waged on hills

Defeated their rulers and spoilt their woods

Tried them dry and arid deserts

[3] Oh great Pandya, you defeated the Kuttuvas

Many in number the rulers of Kutta Nad

In the large ground of festive celebration

You gifted worthy gold and elephants

To the warriors who attacked the foes

With broad shoulders and very bold

5. Told in third person with lots of speeches

6 Every line is a unit and not a stanza

You the lovable ruler of Korkai port

That parted as two, the town and slum

Pearl divers in slum so narrow and dark

Harvest conches and pearls from sea

7. Centred on a few heroes

Protoganist of Madurai Kanji defeated many kings who were then heroes and known for their bravery. For example, the defeat of Kosar kings is given below

To establish your everlasting good fame

You made Kosar kings, young and brave

To obey your orders and praise your name

Though famous Maran was their commander

8 Accepted for generations

The idyll is appreciated for generations and it is a living literature a historical record of King Pandyas defeat over the ARYANS and the royal existence Madurai city for centuries. Dr K. Kailasapathy feels the heroic poetry paves way for National consciousness in the Tamil land and it still prevails. Tamils spread across the seas are proud of their culture and heritage.

All idylls in the collection in [Pathu paattu] The Ten Idylls are narratives. King Nedunchezhiyan of Pandya dynasty, Karikalan of Chola dynasty and the lineage of Chera kings and other petty kings are the heroes or protoganists found in the ten idylls. Since all the above characteristics are present in Madurai Kanji it is crystal clear that this is the earliest heroic poetry of human history. Others are bardic poetry penned few centuries later.

அறிவியல் வெற்றியா? தோல்வியா?

பேராசிரியர் சம்பந்தம் ஏகாம்பரம்
கணிதத் துறைத் தலைவர் (பணி நிறைவு)
கொலம்பியா கல்லூரி, வான்குவர்
பிரிட்டிசு கொலம்பியா மாநிலம், கனடா

முன்னுரை:

நான் அறிவியலின் அரசியான கணக்கியலில் ஆய்வு செய்ய வாய்ப்பளித்த பல்கலைக் கழகத்திற்கு நன்றி சொல்லவேண்டும். அறிவியலைப் பற்றி யான் படித்தும் பெற்றதும் உணர்ந்ததும் என்னை எழுதத் தூண்டியது. ''அறிவியல் வளர்ச்சி வெற்றியா? தோல்வியா?'' அறிவியல் ஒரு கருவி. தலைப்பில் கருவியென்பது சுட்டுப் பெயர். அறிவியல் என்பது அறிவியலாளர்களைக் குறிக்கிறது என்றும் பொருள்படும்.

இந்த நாட்டை ஆள்வது தென்றல் கட்சி என்று வைத்துக் கொள்வோம். . தென்றல் ஆளப் போவதில்லை. தென்றலில் உள்ள கட்சியில் இருக்கும் தலைவர்கள்தான்ஆளப் போகிறார்கள். தீதோ நன்றோ தென்றல் தருவதில்லை . கட்சியின் தலைவர்கள் தருவதுதான். இந்த தலைப்பின் பொருளைப் புரிந்து கொண்டு மேலே செல்வோம் .

அறிவியல்:

அறிவியல் ஒரு கருவி. ஒரு கத்தி போன்றது. கூர்மையானது. அறிவு இன்றியமையாதது. அறிவு என்றுமே எப்போதுமே நல்லதைச் செய்யும் என்று சொல்ல முடியுமா? கத்தியால் அடுத்தவருக்குத் துன்பம் விளைவிக்கலாம். சமையலுக்கும்கறிகாய் நறுக்கலாம். கத்தியால் இளநீரையும் சீவிக் குடிக்கலாம்.

உங்கள் திறன் பேசி, கணினி எல்லாமும் அப்படித் தான். இன்று இந்த கணத்தில் நல்லது செய்கிறது. காணொளியில் நம்மை இணைக்கிறது. ஆனாலும் இது முடிந்த பின் திறன் பேசி எப்படிப் பயன்படும் என்பது உங்கள் கையில் தான் இருக்கிறது. ஆக்கமும் அழிவும் உங்கள் கையிலே. தீதும் நன்றும் பிறர் தர வாரா. கணியன் நமக்கு கர்மயோக வாழ்வியலை ஒற்றை வரியில்,

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று சொல்லிவிட்டான். ஐன்ஸ்டைன் உலகுக்குத் தந்த அறிவியலைத் தவறாகப் பயன்படுத்தியது ஐன்ஸ்டீன் அல்லவே. ஜப்பான் நாடு வதைக்கப்படவேண்டும் என்ற கொடுமையான அரசியல் ஆளுமை செய்தது அன்று 'ஆண்ட அவன்' தானே. அறிவியல் ஊடகங்களிலும் விளம்பரத்தில் சொல்வதையும் நம்பினால் ஊமைகள் உளறுவதைக் கேட்கும் செவிடர்கள் நாம்தான்.

அறிவின் வரையறை:

வள்ளுவர் அறிவையும் அறம் என்பதையும் தெளிவாக வரையறுத்தவர். அவரது வரையறை பல கோணங்களில் திருக்குறளெங்கும் காணப்படுகிறது.

மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 355), செம்பொருள் காண்பது அறிவு (குறள் 358), அறிவு அற்றம் காக்கும் கருவி (குறள் 421), நன்றின்பால் உய்ப்பது அறிவு (குறள் 422), நுண்பொருள் காண்பது அறிவு (குறள்424), மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு (குறள் 425), இன்னும் பல.

அறிவைப் புரிந்து கொள்ளாமல் அறிவியல் என்னும் கத்தியை எடுக்கலாமா? மகிழுந்து ஓட்டத் தெரியாமல் எட்டு போட்டால் போதும் என்று ஓட்டுநர் உரிமம் கொடுக்கலாமா? அரிசி ஒரு பங்கும் பருப்பு அரை பங்கும் மிளகாய்த்தூள் ஐந்து பங்கும் போட்டு சமைத்தால் மனிதன் உண்ண முடியுமா?

உப்புநோய், சர்க்கரை நோய் என்று உணவையே கிருமிகளின் கூடாரமாகக் காட்டுவது அறிவியலா? நமது உடல் முற்றிலும் கிருமிகளால் சூழப்பட்ட போர்க்களம் என்று சொல்வது அறிவியலா? நீரிலே கிருமிகள் இருக்கலாம். ஆனால் சுத்தப்படுத்தும் கருவிகளை வைத்து நீரையும் கிருமிகள் சூழ்ந்தது என்று வணிகமாக்குவது அறிவியலா? சுத்தப்படுத்தி விற்கும் நீரிலே மீன்கள் இறந்து விடுகின்றன. அதை ஏன் மனிதன் குடிக்கிறான்? ஒரு சொட்டு நீர் கூட அறிவியல் உண்டுபண்ண முடியாது. முடியும் என்றால் அறிவியல் ஏன் செவ்வாய்க் கோளிலும் திங்கள் என்ற துணைக் கோளிலும் நீரைத் தேடுகிறது? இல்லை, அது அசுர வணிகம். இப்போது தரப்படும் அறிவு தரப் படுகிறதா? தரமுள்ளதாகத் தோன்றுகிறதா?

அரிச்சுவடி ஆரம்பிக்கும் நிலையிலிருந்து உயர்நிலை ஆய்வுக்கல்வி அனைத்திலும் நன்றின் பால் செலுத்தும் அறிவு வேண்டும். தெளிவாக சமூகப் பயன்பாடுகள் உள்ள ஆய்வு வேண்டும். நிலம், நீர்,காற்று, வெப்பநிலை,

போன்ற உயர்ந்த இயற்கைச் செல்வங்களோடு இயைந்தும் அவைகளை வளப்படுத்தும் ஆய்வு வேண்டும். மனித இனத்துக்குப் பயன்படும் ஆய்வு வேண்டும். அறிவியலை ஐம்புலன்களின் அடிமையாகச் செய்ய நாநயத்துடன் விளம்பரம் காட்டி நாணயத்தை ஈட்டும் வழியாக மாற்றும் அறிவியல் வேண்டாம். எந்த அறிவியல் கருவிக்கும் நிலம் நீர் காற்று இவைகளின் தூய்மைக்கும் ஊறு விளைவித்து வரும் பயன் ஒன்று உண்டென்றால் அதை முற்றிலும் ஒதுக்கி விடுவதே மனித நேய அறிவியல். நல்லது என்பது என்ன? யாருக்கும் தீமையிலாத ஒன்றே நல்லது. ஒரு சொல்லோ செயலோ நல்லது என்றால் அது மனித சமுதாயாத்தை மேம்படுத்த வேண்டும்.

உணவில் புரட்சி:

முதலில் உணவை எடுத்துக் கொள்வோம். உணவு வாழ்க்கையின் ஆதாரம். உணவைக் கொடுப்பது நமது அன்னை பூமி. அன்னைதானே பால் நினைந்து ஊட்டும் தாய். அன்னை பூமியும் அப்படித்தான். உணவை ஆய்வோம். உணவு எப்படி வருகிறது. மூலம் என்ன. மண், விதை, சூரியன், நீர், காற்று, பறவைகள், விலங்குகள், மேலும் உழவர்கள். இந்த அடிப்படை ஆதாரங்கள் இன்று எப்படி இருக்கின்றன?

உண்ணும் உணவு இயற்கை அன்னை தர வேண்டும். தொழிற்சாலையில் அறிவியல் என்ற பெயரில் இடித்தும் நசுக்கியும் ஈரத்தன்மையை உறிஞ்சியும் கெடாமல் பல நாட்கள் இருக்க இராசயனக் கூறுகளைக் கலந்தும் அன்னை கொடுப்பாளா? எந்திரம் கொடுக்கிறதே! இருமடங்கு விலை கொடுத்தது வாங்கி நஞ்சையும் உண்பதா நாகரிகம்? இயற்கையை அழிப்பது எதுவுமே அறிவியல் அல்ல.

நூற்றுக்கணக்கான அடிகளுக்கு மேல் பூமியைத் துளைத்து வீட்டுக்கு வீடு நீரை எடுத்துக் கொள்ளுகிறோம். ஆயிரக் கணக்கான அடிகளுக்கு மேல் துளைத்து எரிஎண்ணெய், எரிவாயு மற்றும் கனிம வளங்களை எடுத்துக் கொண்டே இருக்கிறோம். நாம் இயற்கைக்குத் திரும்ப எதைக் கொடுக்கிறோம்? எடுப்பதை விட இயற்கைக்கு கொடுப்பது அதிகமாக இருப்பதுதானே கொடுப்போரின் மாண்பு!

நமது ஆடம்பர வசதிக்காக அறிவியலைப் பயன்படுத்துவது மனித இனத்துக்கு வெற்றியாக நினைக்கிறோம். நிலம் மலடாக்கப் பட்டும், மரபு அணுக்கள் சிதைக்கப் பட்டும் மனிதனின் இயற்கையான பிணியெதிர்ப்பு ஆற்றல் அழிக்கப் பட்டும் மனித இனம் நலிந்து கொண்டே போகிறதே!

உலகம் முழுவதும் அறிவியல் ஆய்வு இதழ்கள் எழுதிக் கொண்டிருந்தாலும் என்ன பயன்? கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பசுமைப் புரட்சி என்று நாம் நடந்து வந்து கொண்டிருக்கும் பாதை இது. அறிவியல் வெற்றி என்று தோல்வியைத் தோரணம் கட்டிக் கொண்டாடுகிறதே! இதுவா அறிவியலின் வெற்றி? இல்லை. இது எல்லோரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் தோல்வி! இப்படியா அறிவியலைப் பயன்படுத்துவது?

தமிழ் கூறும் வாழ்வியல். உண்ண உனவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மூன்று மட்டுமே மனிதனின் ஆதாரத் தேவைகள்.

1. பசி இயற்கையானது.
2. முதுமை இயற்கையானது.
3. இறப்பும் இயற்கையானது.

மூன்றும் எல்லோருக்கும் பொதுவானது. இயற்கையின் நியதி. ஆங்கிலத்தில் ஆதாரத் தேவைகள், *"Existential Needs"* என்பர். ஆனால் சிறிது சிந்தித்துப் பாருங்கள். பசி, முதுமை, இறப்பு என்பது இயற்கை விதிகள். ஆயினும் மருத்துவத் துறையில் முதுமை, இறப்பு என்ற இயற்கை விதிகள் நோயென்று மருத்துவ அறிவியல் சொல்கிறது. உடலின் அறிவியல் வேறு. நவீன அறிவியல் கருவிகளால் உலகம் பயத்தை விதைத்து பணத்தை அறுவடை செய்யும் உலகமாக இப்போது மாறிவிட்டது. மனிதனுக்குக் குழந்தை பிறப்பதும் சோதனைச் சாலைக்கு விலை போய்விட்டது. பனிக்குடம் சிறுத்து சோதனைக்குழாயாக மாறுகின்றது. இவையெல்லாம் அறிவியலின் வெற்றியா? தோல்வியா? விழித்தெழுவோம்!

இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் அமைந்த ஆதிச்சநல்லூர்

முத்தாலங்குறிச்சி காமராசு

ஆதிச்சநல்லூர் என்றாலே உலக நாகரீகத்தின் தொட்டில் என்று கூறிவிடுவோம். உலகத்தில் உள்ள அரிதான நாகரீகத்திற்கு ஈடான நாகரீகம் தாமிரபரணி கரை நாகரீகம். சிந்து சமவெளி நாகரீகம், சுமேரியா நாகரீகம், எகிப்து நாகரீகம், மொசபொடோமியா நாகரீகம் என எதை பற்றி பேசினாலும் அதற்கு இணையான தொடர்பான நாகரீகம் ஆதிச்சநல்லூர் நாகரீகம்.

இந்தியாவில் முதல் முதலில் அகழாய்வு செய்த இடமென்று ஆதிச்சநல்லூர் கூறப்படுகிறது. ஜெர்மன் நாட்டு அறிஞர் டாக்டர் ஜகோர்தான் முதல் முதலில் 1874 ல் இங்கு ஆய்வு செய்தார். கிடைத்தபொருள்களை பெர்லின் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்துக்கொண்டார். ஆக முதலிலேயே நமது முன்னோர்களின் நினைவு சின்னங்களான முதுமக்கள் தாழி, எலும்புகூடுகள் கப்பலில் கடலேறி பெர்லின் நகரில் உள்ளது. அங்குள்ள 64 அருங்காட்சியகத்தில் ஏதோ அருங்காட்சியகத்தில் அது இடம் பிடித்து விட்டது.

கால்டுவெல் எனும் கிறிஸ்தவ பிஷப் அகழாய்வு மீது ஆர்வம் கொண்டவர். அவரும் அவர் பங்குக்கு ஆதிச்சநல்லூர் கொற்கை போன்ற தாமிரபரணி ஆற்றங்கரையில்

தமிழர்களின் பெருமையை வெளிக்கொண்டு வர ஆய்வு செய்தார். அவருடைய திருநெல்வேலி சரித்திரத்தில் இதைப்பற்றி பட்டியலிட்டுள்ளார்.

இதற்கிடையில் திருச்செந்தூர் ரயில் ரோடு போடும் போது ஆங்காங்கே குழி தோண்ட ஆரம்பித்தார்கள். இந்த வேளையில் ஆதிச்சநல்லூர் பரம்பில் ஆங்காங்கே புதை பொருள்கள் கிடைக்க பொதுமக்கள் கடப்பாரை கம்பிகள் கொண்டு வந்து இந்த தளத்தினை கூறுபோட ஆரம்பித்தனர். எனவே இந்திய தொல்லியல் துறையினர் இந்த பகுதியில் 125 ஏக்கர் இடத்தினை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்தது. அதன் பின் 1902 அலெக்சாண்டர் இரியா ஆய்வு செய்து வெண்கலம், இரும்பு, முதுமக்கள் தாழிகள், விதவிதமான மண்பாண்டங்கள், எலும்பு கூடு போன்ற போருள்களை 21 மாட்டு வண்டியில் ஏற்றி, ரயில் மூலமாக சென்னை கொண்டு சென்று ஆவணப்படுத்தினார். தற்போதும் இந்த பொருள்கள் சென்னை கன்னிமாரா நூலகம் அருகில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது.

1920 ல் சிந்து சமவெளியை ஆய்வு செய்த வங்க தேசத்து அறிஞர் சிந்து சமவெளி நாகரீகத்திற்கு இணையான அல்லது முந்தைய நாகரீகம் தாமிரபரணி கரை நாகரீகம், தமிழர்கள் நாகரீகம் எனவும், தாமிரபரணி கரையில் இருந்து தான் சிந்து சமவெளிக்கு நாகரீகம் வந்தது என்றும் கூறினார். இதனால் உலகமே ஆதிச்சநல்லூரை நோக்கியது.

இதற்கிடையில் இந்திய தொல்லியல் துறையினர் தியாக சத்திய மூர்த்தி தலைமையில் 2004 ல் அகழாய்வு செய்தனர். இதன் அகாழ்ய்வு அறிக்கை உயர்நீதி மன்ற வழக்கு தொடர்ந்த பின்பு 17 வருடம் கழித்து தான் கிடைத்தது. தற்போது ஆதிச்சநல்லூரை தொடர்ந்து சிவகளையில் ஆய்வு செய்த போது கிடைத்த நெற்மணியை லக்னோ பழைய பீர்பால் ஆய்வாகத்தில் ஆய்வாளர் மொர்த்தகாய் ஆய்வு செய்து அதன் வயதை 4500 என நிருபணம் செய்துள்ளார். இதை உலக தமிழ்சங்க மாநாட்டில் டாக்டர் ராஜன் அறிவித்தார்.

இந்தியாவிலேயே முதல் சைட் மியூசியம் என்ற பெருமையுடன் தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி ஆற்றங்கரை ஆதிச்சநல்லூரில் சிறப்பான ஒரு மியூசியம் திறக்கப்பட்டது. இந்த மியூசியத்தினை 05.08.2023 அன்று மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், கனிமொழி எம்.பி முன்னிலையில் திறந்தார். மேலும் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியத்துக்கு அடிக்கல்லும் நாட்டினார். இதற்கான மாடல் உருவாக்கப்பட்டு, அதையும் பார்வைக்கு வைத்தனர். இந்த அருங்காட்சியகத்தில் ஆதிச்சநல்லூரில் இருந்து எடுக்கப்பட்டு, ஜெர்மன் நாட்டின் பெர்லின், லண்டன் உள்பட பல நகரங்களில் உள்ள பொருள்கள் எடுத்துவரப்பட்டு காட்சிக்கு வைக்கப்படும் என்றனர் மத்திய தொல்லியல் துறையினர்.

சைட் மியூசியத்தில் இங்கு கிடைத்த 2600 வரு பழமையான 26 வயது வாலிபனின் எலும்பு கூடய் பார்வைக்கு வந்திருந்தனர். மழை பாதிப்புக்கு பிறகு அந்த எலும்பு கூட்டை எடுத்து சென்று விட்டனர். இங்குள்ள பி சைட்டில் தான் சைட் மியூசியம் அமைந்துள்ளது. மியூசியம் அமைந்தவுடன் இதை பார்க்க உள்நாடு, வெளிநாடு என பார்வையாளர்கள் குவிந்து வருகின்றனர்.

மாநில அரசு ஆதிச்சநல்லூர் , சிவகளை, கொற்கையில் அகழ்ந்தெடுத்த பொருள்களையெல்லாம் பாளையங்கோட்டை ரெட்டியார் பட்டி மலையில் கட்டப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியகத்தில் சுமார் 50 கோடி செலவில் அருங்காட்சியகம் அமைத்து விரைவில் திறக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இங்குள்ள சி சைட்டில் ஆய்வு செய்யும் பணி 20 சதவீதம் தான் முடிந்துள்ளது. மேலும் 80 சதவீதம் பணியை முடியவில்லை.

இந்த இடத்தில் பணிகள் முடிந்து சைட் மியூசியத்தினை விரிவு படுத்தி இங்கிருந்து எடுத்துச்சென்ற பொருள்களை மீண்டும் இங்கே கொண்டு வந்து வைக்கவேண்டும் என்பதே ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

ஆதிச்சநல்லூரில் நடந்த வழக்கு:

ஆதிச்சநல்லூரில் 1876 ல் இருந்தே அகழாய்வு நடந்தாலும் கூட இங்கே அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என பலதரப்பட்ட மக்களிடம் கோரிக்கை இருந்தது . இந்த நிலையில் எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை 2017 ல் தொடர்ந்தார்.

இந்த வழக்கில் 2004 நடந்த அகழாய்வு அறிக்கை வேண்டும். மீண்டும் ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் சிவகளையில் அகழாய்வு செய்யவேண்டும். இங்கே அருங்காட்சியகம் அமைக்கவேண்டும் போன்ற கோரிக்கையை வைத்தார். தற்போது இந்த மூன்று கோரிக்கையும் நிறைவேறி விட்டது. ஆதிச்சநல்லூரில் மத்திய மாநில அரசுகள் அகழாய்வு செய்துள்ளது. 2004ல் நடந்த அகழாய்வு அறிக்கை வெளி வந்துள்ளது.

மத்திய அரசு சார்பில் ஆதிச்சநல்லூரில் இந்தியாவிலேயே முதல் முதலாக சைட் மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலஅரசு ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளையில் அகழாய்வு செய்த பொருள்களை திருநெல்வேலி மாவட்டம் கன்னியாகுமரி & மதுரை நெடுஞ்சாலையில்உள்ள ரெட்டியார் பட்டி மலையில் அருங்காட்சியகம் வைத்து காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பணி 80 சதவீதம் முடிந்து விட்டது. கீழடியை போல மூன்று மடங்கு பெரிய அளவில் இந்த அருங்காட்சியகம் அமையவுள்ளது. ஆதிச்சநல்லூரில் 1902ல் அகழாய்வு செய்த இங்கிலாந்தை சேர்ந்த அலெக்ஸாண்டர் இரியாதாமிரபரணி கரையில் 37 இடங்களில் அகழாய்வு செய்ய வேண்டும் என எழுதி வைத்து விட்டு சென்றுள்ளார். தற்போது மத்திய அரசு ஆதிச்சநல்லூரில் புதைக்கப்பட்டவர்கள் எங்கே வாழ்ந்து இருப்பார்கள் என ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்காக திருக்களூர், ஆதிச்சநல்லூர், அகரம் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து வாழ்விடம் இதுதான் என நிரூபத்து உள்ளனர்.

ஆதிச்சநல்லூரில் மத்திய மாநில அரசுகள் தற்போது நடத்திய அகழாய்வின் அறிக்கை இதுவரை வெளிவர வில்லை. அந்த அறிக்கை வெளியே வந்தால் தாமிரபரணி கரை நாகரீகம் மேலும் பல அபூர்வ தகவலையும், தமிழர்களின் தொன்மையையும் வெளிபடுத்தும் என நம்புகிறோம்.

நாகர் வழிபாடு – இருந்ததும் இருப்பதும்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,
மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர், பதிப்பாளர், மதுரை

சிவன், முருகன், ராமன், என்று அன் விகுதியுடன் அழைக்கும் போக்கை நாகர் ஐயனார் பிள்ளையார். சூரியர், சந்திரர், இந்திரர் ஆகியவற்றில் காண இயலாது காரணம், முதலில் சொல்லப்பட்டவை புராண தெய்வங்கள் பின்னர் சுட்டப்பட்டவை மக்களின் நம்பிக்கை சார்ந்த வழக்கலாறுகள். இவற்றில் நாகர் வழிபாடு என்பது நாகர் இனத்துக்கு உரியது. மனித வரலாற்றின் முதல் இனமான தமிழ் இனம் தொடக்கத்தில் குமரிக் கண்டத்தில் வாழ்ந்த போது தம்மை நாகர் இனம் என்று அழைத்தது. தமிழ் என்ற சொல் வழக்கு காலத்தால் பிந்தியது. இன்றும் தென் மாவட்டங்களான கன்யாகுமரியிலும் நாகர்கோயிலிலும் நாகத்தை நாகர் அம்மை என்றே குறிக்கின்றனர். மற்ற ஊர்களைப் போல நாகம்மா என்றோ நாகாத்தம்மா என்றோ குறிப்பிடுபது கிடையாது. ஆண் பெண் நாகங்களை நாகராஜா, நாகர் அம்மை என்றே அழைக்கின்றனர். ஆதியில் மக்கள் தாம் வணங்கிய நாகத்தின் பெயரால் அதனையே தனது குல முதுவராகக் *[totem]* கொண்டு தம்மை நாகர் இனம் என்றே சுட்டினர். வி, கனகசபை பிள்ளை இக்கருத்தை தனது *Tamils, eighteen hundred years ago* என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

கடல்கோளால் சிதறிய நாகர் கூட்டம்

கடல்கோள் மூன்று முறை வந்து தென் பகுதியில் மனித சமுதாயம் தோன்றிய நிலப்பரப்பைத் துண்டாடியதாக அறிகிறோம். அப்போது ஆங்காங்கே எஞ்சிய தீவுகளான அந்தமான் நிகோபார், ஜாவா, கம்போடியா, இலங்கை, ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் மக்கள் இன்றும் தம்மை நாகர் என்றே அழைக்கின்றனர். நாகவரம் [நக்கவரம்] என்பது நிகோபார் தீவின் இயற்பெயராகும். புத்தம் அறிமுகமாகி சங்கங்கள் தோன்றிய பிறகு எழுதப்பட்ட இலக்கண் நூலான தொல்காப்பியம்

உலக வழக்கும் நாடக வழக்கும்

பாடல் சான்ற புலனெறி வழக்கு

என்று குறிப்பிடுவதில் உலக வழக்கு என்பது மண்ணின் மைந்தர் [நாகர்] பின்பற்றிய விரிவான உலக வழக்கு ஆகும். நாடக வழக்கு என்றது அப்போது சான்றோர் மற்றும் சமயப் பெரியவர்களால் புகுத்தப்பட்ட வழக்கு, புலனெறி வழக்கு என்றது புனையப்பட்ட இலக்கிய வழக்கு எனப்படும். நாகர் என்று தனியாகப் பெயர் குறிப்பிடவில்லை எனினும் அவர்களின் மரபும் பண்பாடும் உலக வழக்கு எனப் போற்றப்பட்டதை அறிகிறோம்.

ஏன் நாகத்தை வழிபட்டனர்?

நாகம் பூமிக்குள் இருந்து வந்து அங்கேயே சென்று மறைந்து விடுவதால் மக்கள் தம் மூதாதையரும் அங்கிருந்து வந்து அங்கேயே சென்றுவிட்டனர் என்று காரண காரிய இயைபுடன் நம்பி வந்தனர். தொன்மம் என்பது ஆதி மனிதனின் அறிவியல் தேடல் என்பர் தொன்மவியல் அறிஞர். மண், மலை, கடல் போன்ற இயற்கை கூறுகளில் இருந்து தோன்றி

திரும்பவும் அவ்ற்றுக்குள் போய் மறைவதைக் கண்ட மனிதன் அஞ்சி சூரியன் சந்திரன் பாம்பு ஆகியவற்றை வழிபடத் தொடங்கினான். வழிபாடு வணக்கம் என்பன ஆரம்பத்தில் அச்சத்தின் வெளிப்பாடே ஆகும் பின்னர் அது மரியாதை நிமித்தமாகவும் நடைபெற்றது.



நாகர் இனத்தின் தலைவனாக பிடாரன் இருந்தான். பிடாரி நாகர் இனத்தின் தலைவி அல்லது வழிபடு தெய்வம் ஆவாள். பிடாரன் பிற்காலத்தில் சிவனாக உயர்வு பெற்றான். பாம்புகள் அவன் தலையிலும் மார்பிலும் கைகளிலும் சுற்றித் தவழ்ந்தன. பிடாரி காளியாக உருமாற்றம் பெற்றாள். நாகர் வழிபாடு ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, வட அமேரிக்கா மற்றும் ஐரோப்பா என உலகின் அனைத்துப் பக்திகளிலும் ஆதிகால மனிதர்களிடமிருந்து தொடங்கி நிறுவனச் சமயங்களின் வரவு வரை தனிச் செல்வாக்கு பெற்றிருந்தது.

புற்று வழிபாடு

நாகங்கள் கறையான் கட்டும் புற்றுக்களில் போய் குடிகொள்ளும். புற்றுக்கள் பிரமிடு போல மேல் நோக்கி வளர்ந்திருக்கும். [முன்பு நாம் பார்த்த மர வழிபாட்டிலும் வானத்தை நோக்கிச் செல்லும் மரத்தைக் கண்டு மனிதன் அஞ்சி வழிபட்டதை அறிந்தோம்]. மர வழிபாட்டின் தொடர்ச்சியாகவே இந்துசமயக் கோயில் கட்டிடக் கலை கொடி மரம் அமைத்து அது பிரபஞ்ச சக்தியை பக்தர்களுக்கு வழங்கும் என்ற கருத்தியலை

உருவாக்கியது. மற்ற சமய வழிபாட்டுத் தலங்களிலும் வானை நோக்கிய முகடுகளும் கோபுரங்களும் மினராக்களும் பகோடாக்களும் உருவாயின.

புற்றுகளின் அறிவியல் தன்மை குறித்து *Hutchinson 20th century Encyclopedia , The mounds of magnetic termites in the northern Australia reach some five metre [fifteen feet] and are aligned north – south.*

In this way they spared the burning heat of the mid day sun , but the broad sides of the nest catch the warmth in, early morning and evening [p.1210] ***என்று குறிப்பிடுகிறது. புற்றின் அடிபாகத்தில் அங்கு மண்ணில் இருக்கும் வெப்ப நிலை காலையிலும் மாலையிலும் புற்றைச் சுற்றி வரும் பெண்களின் பாதத்தில் முடிவுறும் அனைத்து நரம்புகளையும் தூண்டி செயலூக்கம் அளிக்கிறது. இதனால் புற்றை சுற்றி வருவோருக்கு நோய் தீர்கிறது; மனம் தெளிவடைகிறது; கர்ப்பம் தங்காதவர்களுக்கு கர்ப்பம் தங்குகிறது. புற்றுக்குள் உறையும் பாம்புகள் முட்டை பால் அருந்தும் என பல பக்தைகள் நம்புகின்றனர். இவை இரண்டையும் பாம்பு தீண்டாது.***

நாகர் இனமும் இந்திரனும்

நாகர் இனத் தலைவனாக மன்னனாக இந்திரன் விளங்கினான். . இந்திரனுக்கு சாபம் கொடுத்த கதை தோன்றிய காலத்தில் நாகர் இனமும் தன பெயரை இழந்துவிட்டது. இனப்பெயர் மறைந்ததும் பெரு மன்னர்களின் பெயரால் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று அழைக்கத் தொடங்கினர்.

நாகர் இனத்தின் தலைவனான இந்திரனைத் தனது தலைவனாகப் பவுத்த சமயம் ஏற்றுக்கொண்டது சமணமும் இந்திரனைப் போற்றியது. இந்து சமயங்களான சைவமும் வைணவமும் இந்திரனை எதிர்த்து இழிவாகப் பேசின.

நகரத்தின் காவல் தெய்வம்

கீழை நாடுகளின் ஏதென்ஸ் எனப்படும் மதுரையை சுற்றி படுத்து நான்கு மால் கட்டியது ஒரு நாகம் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. இவ்வாறு கிரீஸ் நாட்டின் காவல்

நகரங்களுள் ஒன்றான ஏதென்சு நகரின் கோட்டையை சுற்றி படுத்து காவல் காப்பதும் நாகப் பாம்பு என்று வரலாற்றறிஞர் ஹீரோடோட்டஸ் கூறியுள்ளார். நகரங்களுக்கும் காவல் தெய்வமாக நாகம் விளங்கும் கதைகள் நாட்டுப்புறத்திலும் உண்டு.

ஜோடிப்பாம்புகள் வழிபாடு

பாம்பு என்பது ஆதியில் இருந்தே வளமைக் குறியீடாகவே உணரப்பட்டது. பாம்பை விரைத்த ஆண்குறி *[phallic symbol]* ஆகவும் பாம்பு அதிக எண்ணிக்கையில் குட்டிகள் போடுவதை பிள்ளைப் பேற்றுக்கான வளமைச் சின்னமாகவும் *[fertility symbol]* கருதினர். படமெடுத்தாடும் பாம்பின் தலைப்பகுதி சங்க இலக்கியத்தில் பெண்ணுறுப்புக்கு உவமையாக பயன்படுத்தப்பட்டது. பாம்பு என்பது ஆணையும் குறித்தது பெண்ணையும் குறித்தது.

சி ஜே யூங் என்னும் உளவியல் அறிவியலார் பாம்பை பாலியலுக்கான கூட்டு நனவிலித்தன்மையின் மூலப் படைப்பாகக் [ARCHETYPE] கருதுகிறார். காலம் காலமாக பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதனின் அடிமனதில் பாம்பு என்றாலே அது புணர்ச்சி வடிவில் பிண்ணி பிணைந்து நிமிர்ந்து நிற்பதாகப் பதிந்துவிட்டது. எனவே பாம்பு கனவில் வருவதும் பாலியல் தேடலுக்கான அறிகுறி என்று சொல்லி வந்தனர். அரவணைத்து நிற்கும் பாம்புகளை வணங்கினால் [பாலியல் தேட்டம் அதிகரித்து] குழந்தை பேறு கிட்டும் என்ற நமபிக்கையும் நிலைத்துவிட்டது.

உலகச் சமயங்கள் அனைத்திலும் பெண்ணின் உடம்பைச் சுற்றி பாம்புகள் பிண்ணிப் பிணைந்திருப்பது அவளது பாலியல் திறனையும் அதற்கு அடுத்த நிலையில் அவளது கரு வளத்தையும் குறிக்கும் தெய்வ உருவங்களாக போற்றப்பட்டன. ஐரோப்பாவில் கிறிஸ்துவம் பரவுவதற்கு முன்பு வணங்கப்பட்ட பல பெண் தெய்வங்கள் பாம்புகளோடு காட்சியளித்தன.

உலகம் முழுக்க நாகர் வழிபாடு ஒரு காலத்தில் இருந்தது பின்பு இந்து சமயம், கிறிஸ்துவம் போன்ற நிறுவனப்படுத்தப்பட்ட சமயங்கள் வந்ததும் மறைந்துவிட்டது. நாகத்தைக் கிறிஸ்துவ இஸ்லாமிய சமயங்கள் சைத்தான் என்று சொல்லி அதன் வழிபாட்டுத் தகுதியைப் போக்கிவிட்டன. இந்தியச் சமயங்கள் தமது நாட்டுப்புற வழிபாட்டு மரபை விட்டுவிடாமல் இருப்பதால் நாகர் வழிபாடு உள்வாங்கி கொள்ளப்பட்டது.

பவுத்த மதத்தில் நாகர் வழிபாடு பிரசித்தி பெற்றது. இலங்கையிலும் ஜாவா தீவிலும் நாகபூஷணி என்ற பெண்தெய்வம் பவுத்த மரபின் செல்வாக்கு படைத்த தெய்வம் ஆகும். சமண மதத்தில் நயினார் கோயிலில் நாகர் வழிபாடு நடந்தது. நாகர்கள் வாழ்ந்த தீவு நயினார் தீவு என்று அழைக்கப்பட்டது. சைவத்திலும் வைணவத்திலும் சிவனுக்கு அணிகலனாகவும் பெருமாளுக்குப் படுக்கையாகவும் நாகர் இடம்பெற்றுள்ளது. பிள்ளையாருக்கு இடையணியாகவும் அம்மனுக்குக் குடையாகவும் நாகர் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

மரணம் மற்றும் மறு பிறப்பின் குறியீடு

நாகம் பூமிக்குள் இருந்து வருவதால் அது இறந்தோரின் ஆவி என்று நம்பினார். நாகம் சட்டை உரித்து புத்துருப் பெறுவதால் அது மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பதாக நம்பினர். நாகத்தை தொப்புள் கொடியோடு இணைத்து நோக்கியும் அதனை பிறப்பின் குறியீடாகக் கருதினர்.

நாகரி எழுத்து

தொல்காப்பியர் அதங்கோட்டாசான் முன்னிலையில் தனது நூலை அரங்கேற்றினார். அவர் தமது நூலில் என்ப, என்மனார் புலவர் என்று சுட்டியிருப்பது அவருக்கு முன்பு வாழ்ந்த சான்றோர்களின் கருத்தைக் குறிக்கிறது. இரண்டாம் சங்கத்தின் தலைவராக அகத்தியர் இருந்தார். அகத்தியர் என்பவர் அவலோகிதீஎன்ற போதிசத்வர் என்பது ஆராய்ச்சியில் உறுதியாகிவிட்டது. தொல்காப்பியர் காலத்தில் பவுத்த சமண சமயங்கள் தமிழகம் வந்துவிட்டன. அதற்கு முன்பு இங்கு நாகர் எழுத்துக்களும் இலக்கியங்களும் இருந்தன. அவர் என்ப என்மனார் புலவர் என்று குறிப்பிட்டது நாகர் எழுத்தில் அமைந்த இலக்கியங்களை எனக் கருத இடமுண்டு.

நாகர் பயன்படுத்திய எழுத்துக்கள் நாகரி எனப்பட்டது. இதில் இருந்து சில மாற்றங்களுடன் உருவானது தேவ நாகரி ஆகும். தேவ நாகரியின் அட்சரங்களைக் கடன் வாங்கிக்கொண்டு பிற இந்திய மொழிகள் தம்மை சம்ஸ்கிருதமயமாக்கின. தமிழ் அவ்வாறு செய்யவில்லை. தற்சமம் தற்பவம் முறைகளைக் கையாண்டு ஒலிப்பூ முறியை தகவமைத்துகொண்டது.

நாகரிகம்

நாகர்களின் புற வாழ்க்கை முறை முறை நாகரிகம் எனப்பட்டது. அக வாழ்க்கை முறை பண்பாடு எனப்பட்டது. நாகரிகம் எனற சொல் நகர்கள் அமைத்து வாழ்ந்தவர் வழியாகத் தோன்றியது என்பர். நகர் என்பது காவல் அரண்களைக் கொண்ட ஊர் என்பர். இத்தகைய ஊர்களில் வாழ்ந்தோர் நாகர்கள் ஆவர். [நான் வேற்று மாநிலத்தைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் போது இக்கருத்தைச் சொல்லி தமிழ் மலையாளம் இந்தி சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளுக்கு இடையிலான எழுத்துக்களின் உருவ ஒற்றுமையை எடுத்துக்காட்டினேன். அவர்கள் வியந்து போயினர்]

நாகர் வழிபாட்டில் முரண்கள்

காஷ்யப முனிவருக்கு இரண்டு மனைவிகள் மூத்தவளுக்கு கருடனும் இளையவளுக்கு கார்க்கோடகன் மற்றும் வாசுகி பிறந்தனர். இருவருக்கும் பகை தொடர்ந்தது. உலக சமய வரலாறுகளில் ஒரு தகப்பனுக்குப் பிறந்த இருவர் தம்முள் முரண்பட்டு இருவர் வழிவந்தவர்கள் இரு வேறு சமயமாக மலர்வதுண்டு. இலங்கையில் நாகர் என்றும் இயக்கர் என்றும் இரு பிரிவினர் வசித்தனர். நாகர் பூமிக்குள் இருந்து வெளியே வந்த பாம்பினை வாங்கும் பிரிவினர். இயக்கர் என்போர் வான் வழியே பயணிக்கும் யட்சன் அல்லது யட்சிகளை வணங்கும் பிரிவினர். ஆரமபத்தில் நாகத்தை வழிபட்டோர் பின்னர் ஆகாயத்தை உயர்ந்தது எனக் கருதி தமது கடவுளரை வானத்தோடு தொடர்புடையதாக மாற்றிக்கொண்டனர். வானவில்லோடு பாம்புகளை தொடர்புபடுத்தினர்.

நிமிர்ந்து நிற்கும் வானவில் பாம்பு

நாகங்களில் புணர்தலைக் கண்டு வியந்த ஆதிகுடி மக்கள் பாம்பு தரையில் ஊர்ந்து சென்று பூமிக்குள் மறைந்து போதும் பாம்பு பூமிக்கும் வானத்துக்குமாக எழும்பி நேரே நிற்க வல்லது என்பதை மக்கள் கண்டு அதிசயித்தனர். அது நேரேயும் நிற்கும் என்பதை ஏற்றுக்கொண்டனர். அதன் காரணமாக பாம்பு நேரே நிமிர்ந்து நின்று வானத்தில் மேகக் கூட்டத்தில் இருக்கும் தண்ணீரைப் பருகும். அப்போது சிந்தும் துளிகள் மழைத்துளியாகும் என்று நம்பினர். எனவே ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் சில இனத்தவர் வானவில்லை பாம்பாகக் கருதி வணங்கினர். ஆப்பிரிக்காவில் எங்கும் பரவலாக பாம்பு வழிபாடு நடைபெறுவதை ஃபிரேசரும் க.ப. அறவாணனும் தமது நூலில் *[SERPENT CULT]* விரிவாக விளக்கினர்.

கிறிஸ்துவத்துக்கு முன்பு

இஸ்ரவேலர் மற்றும் கானானியர் வாழ்ந்த தேசங்களில் தொடக்கத்தில் பாம்பு வழிபாடு இருந்தது என்பதை உறுதி செய்யும் வகையில் அகழ்வாய்வில் பல கோயில்களில் நாகர் சிலைகள் கிடைத்துள்ளன. பாபிலோனியர் நாகத்தை 'நாபு' என்று அழைத்தனர்.

எகிப்து நாட்டில் ரோமானியர் படைஎடுத்து வருவதற்கு முன்பு வரை பாம்பு வழிபடு தெய்வமாக இருந்து வந்தது. படமெடுக்கும் பாம்பு தலையோடு ஒரு பெண் தெய்வத்தையும் வணங்கினர். பாம்பு நெருப்பை உமிழும் என்ற நம்பிக்கை இங்கு இருந்தது. இதே நம்பிக்கை தான் சீனாவில் டிராகனாக உருவெடுத்தது.

குலமுதுவரான நாகராஜன்

இந்தியாவில் நாகத்தை இரு பாலாகவும் வாங்கினார். ஆண் நாகத்தை நாகா என்றும் பெண் நாகத்தை நாகி என்றும் இந்தியில் அழைத்தனர். பவுத்தம் செல்வாக்குப் பெற்றிருந்த தென் தமிழக மாவட்டங்களில் மற்றும் கேரளாவில் அதிக எண்ணிக்கையில் நாகராஜா கோயில்கள் உள்ளன. நாகப்பட்டினத்தில் பவுத்தர்கள் மிகப்பெரிய நாகராஜா கோயில் கட்டினர். தென் மாவட்டத்தில் நாகர்கோயிலில் நாகராஜா கோயில் உண்டு. அந்த ஊரில் யாரையும் நாகம் தீண்டியதில்லை என்றும் மருத்துவமனை பதிவேட்டில் நாகம் தீண்டி வந்த நோயாளியைப் பற்றி பதிவு ஒன்று கூட இல்லை என்றும் கூறுவர்.

நாகர்கோயில், கன்யாகுமரி மாவட்டங்களில் நாகம்மாவைக் கூட நாகரம்மை என்று தான் அழைக்கின்றனர். நாகர் என்ற வலுக்கு அதன் மீது மக்கள் வைத்திருக்கும் மரியாதையை உணர்த்துகிறது.

கேரளாவில் மேற்காமேடு என்ற இடத்தில் ஆயிரக்கணக்கில் நாகங்கள் ஓரிடத்தில் உள்ளன. அவற்றை மக்கள் அதன் வசிப்பிடத்துக்குச் சென்று வழிபடுகின்றனர். மேற்கு திசை அவர்களுக்கு உயரமாக இருப்பதால் அவர்கள் அந்த மேட்டில் இறந்தவர்களைப் புதைத்து அங்கு விளக்கேற்றி வைக்கின்றனர். அங்கு பாம்புகள் தென்பட்டால் அவை இறந்தவரின் விருப்பத்தை சுட்டிக்காட்ட வருவதாக நம்புகின்றனர்.

பாபிலோனியாவில் நாக தெய்வத்தை நாபு என்றும் சிரியாவில் நின்கிஷ் ஜித்தா என்றும் அழைத்தனர்.

காவல் தெய்வமான நாகம்மா

நாகத்தைப் பெண்ணாகக் கருதி வழிபடும் மரபு தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. பிற நாடுகளிலும் இம்மரபு இருந்தது. கிரிஸ் நாட்டில் வணங்கப்பட்ட நாக தேவதையின் பெயர் மினோவான் என்பதாகும். இத்தெய்வம் பாம்புகளைத் தூக்கி எறிவது போலவும் சிறுத்தைகளைத் தமது கக்கத்தில் இடுக்கியிருக்கும்.

எகிப்தில் படமெடுத்தாடும் பாம்பு தலையுடன் கூடிய நாகம்மாவை வழிபட்டனர். இவளை சூரியக் கடவுளின் கண்களாகவும் போற்றினர். இத்தாலியில் நோயை சுகமாக்கும் கடவுளாக நாகம்மாவை வணங்கினர். அவளுக்கு அன்கிதியா என்று பெயர்.

ஜெர்மனியில் பல குடும்பங்களுக்கு நாகம் குல தெய்வமாக இருந்து அவர்களின் ஆடு மாடுகளைப் பாதுகாத்தது. நாகம் இங்கு ஆணும் பெண்ணும் என ஜோடியாக இருந்து தமது குடும்பங்களைக் காப்பதாக நம்பினர்.

ஜப்பானில் மத்சுரா யோஹிமே என்ற பெயரில் நாகம்மாவை வழிபட்டனர். கொரியாவில் இயோப்ஷின் என்ற நாகம்மா செல்வத்துக்குரிய தெய்வமாகப் போற்றப்பட்டாள். இவள் காதுகளுடன் கூடிய பாம்பு ரூபத்தில் இருந்தாள். இவளுக்கு எழு மகள்கள் உண்டு. ஏழு பேரும் பாம்புகள்.

வானமும் பூமியும் இணைந்து தோன்றிய நாகம்

நாக வழிபாட்டில் முதலில் மண்ணுக்குள் இருந்து மேலே வந்ததாய் அதிசயமாகப் பார்த்து வணங்கிய மனித சமுதாயம் அடுத்துத் தான் வியந்து போற்றும் வானத்தோடு இணைத்தது. வானம் – பூமி. தேவர்-அசுரர் என்ற முரண்கள் இணைந்து நாக வணக்கத்தைத் தக்க வைத்துக்கொண்டன.

இந்து சமய புராணத்தில் காஷ்யப முனிவருக்கும் அவரது இரண்டு மனைவிகளுள் ஒருத்தியான ஓர் அசுரப் பெண்ணொருத்திக்கும் பிறந்த பாம்புகளின் கதைகளைப் போல மற்ற நாடுகளிலும் கதைகள் உள்ளன. கம்போடியாவில் இந்தியப் பிராமணர் ஒருவரிடம் சோமா இளவரசி என்ற நாக தேவதை போரில் தோற்றாள். அதனால் அவள் அவருடைய ஆளுமையை ஏற்றுக்கொண்டாள். அவர்களுக்குப் பிறந்தவர்கள் நாகர்கள் இவர்களே கம்போடிய மக்கள். இதுவே அவர்களின் தோற்றமும் வரலாறும் ஆகும்.

பொதுவாக பிராமணர்கள் மத்தியில் பாம்பு வழிபாடு பரவலாக இல்லை என்றாலும் மத்தியப் பிரதேசத்தில் மட்டும் பரத்வாஜ முனி கோத்திரத்தினர் பாம்பைத் தமது குல தெய்வமாக கொண்டுள்ளனர்.

வட அமெரிக்காவில் வானத்துத் தேவ ஆவிக்கும் பாதாளத்தின் நாக கன்னிக்கும் திருமணமாகி அவர்களுக்குப் பிறந்த பாம்பு பாம்புகளின் தாத்தா அல்லது மூதாதையர் என்று அழைக்கப்பட்டது. அவ்வாறு பாம்பு இனம் பூமிக்கு வந்ததாக நமபுகின்றனர். இந்த தாத்தா பாம்பு தான் சங்கிலி கருப்பன் எனப்படும் கடும் நச்சுப்பாம்பு.

நாகமும் சமயக்கலை இலக்கியமும்

சீனாவில் இங்கிருந்து சென்ற போதிதர்மர் தாமரை சூத்திரத்தை உபதேசித்த போது அங்கு நந்தா, உப நந்தா, சாகரா, வாசுகி, தட்சகா, அனவதப்தா, மனஸ்வின், உத்பாலகா எனப்பட்ட எட்டுப் பாம்புகள் அவ்விடத்தில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன.

இந்து சமயத்தில் யோகக் கலையின் முன்னோடியாகக் கருதப்படும் பதஞ்சலி முனிவர் இடுப்புக்குக் கீழே பாம்பு வடிவம் கொண்டவர். இவரே நடராஜரின் நடனத்தைக் கண்டு

களிக்கும் பேறு பெற்றவரும் ஆவார். ஆவணி மாதம் கடைசி நாள் நாக வழிபாட்டுக்கு மிகவும் ஏற்றது. ஆவணியில் வரும் பஞ்சமி நாக பஞ்சமி எனப்படும். அன்றும் நாகங்களுக்கு சிறப்பு வழிபாடு நடைபெறும் கலியன் பாம்பு யமுனை நதியை விஷமாக்கியதும் கண்ணனால் கொல்லப்பட்டதும் இந்து சமயப் புராணக் கதைகளில் ஒன்றாகும்.

நாகமும் பெண்களும்

நாகத்தைப் பெண்ணாகக் கருதி வழிபடும் சிலர் அதன் பக்தைகளாக இருந்து சாமியாடியாகி விட்டனர். நாகம்மாள் பெண்களின் மீதேறி அவர்கள் சாமியாடிகளாக இருப்பதும் அவர்கள் அருள்வாக்கு சொல்வதும் நாட்டுப்புற அம்மன் கோயில்களில் உண்டு. இவர்கள் சாமியாடும் போது பாம்பைப் போலவே நெளிந்தாடுவது பார்ப்பவர்களை நாகம்மா அவ்ர்கள் உடம்பில் குடிபுகுந்ததை நம்புவதற்கு ஏ/துவாக அமையும். கள ஆய்வின் போது நாகம்மா சாமியாடி ஒருவரைப் பேட்டி கண்ட போது அவர் இரவில் நாகம்மா தன் மீது ஊர்ந்து உடம்பை இறுக்கும் என்றும் முகத்தைத் தடவி முத்தமிடும் என்றும் தெரிவித்தார். சாமியாடிப் பெண்கள் தமது கணவர்களைத் தம்மைத் தொட அனுமதிப்பதில்லை. இடது குறித்து மன நல மருத்துவரிடம் பேட்டி எடுத்த போது அவர் தனது கோணத்தில் ஆராய்ந்து *'They have to be treated and not worshipped'* என்றார்.

நாக ஊர்வலம்

நாகம்மா சாமியாடிகளைப் போல வடநாட்டில் நாகத்தை வணங்கும் பெண் துறவிகள் இருக்கின்றனர். அவர்கள் நாகத்தை கொண்டு நீண்ட ஊர்வலங்கள் நடத்துவதுண்டு. இதன் அடுத்த கட்ட வளர்ச்சி சீனாவில் பவுத்தம் பரவிய பின்பு டிராகன் நடனம் என்ற பெயரில் சிறகுகளும் காதுகளும் கொண்டு நெருப்பை பீச்சி அடிப்பது போனற நாக உருவங்களுடன் நடத்தப்படும் நீண்ட நடன ஊர்வலம் சீனப் புத்தாண்டு அன்று நடக்கும். தற்போது இப்பாம்பு நடனமும் ஊர்வலமும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் பரவிவிட்டது.

பாம்பு நடனம்

பாம்புகள் ஆடுவதை கண்டு அதிசயித்த மனிதன்தானும் அது போல ஆடினால் தனக்கும் அதன் ஆற்றல் கிடைக்கும் என்று நம்பினான். இதனை பிரேசர் போலச் செய்தல் சடங்கு முறை என்றார். இவனது நாக நடனத்ததைப் பார்த்த மற்றவர்கள் இவனிடம் நாக தெய்வம் குடியிருப்பதாக நம்பி வணங்கினர். இதன் தொடர்ச்சியாக இந்தியா சீனா போன்ற நாடுகளில் பாரம்பரியக் கலைகளில் பாம்பு நடனமும் இடம்பெற்றது. சீனாவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக பாம்பு நடனம் திகழ்கிறது.

இந்தியாவில் பரதக் கலையிலும் இப்பாம்பு நடனத்தைச் சேர்த்துவிட்டனர். படமெடுத்தாடும் பாம்பினைப் போல பரதம் ஆடும் பெண்களின் ஆட்ட அமைப்புத் திகழ வேண்டும் என்று ஓர் இலக்கணமும் அமைத்தனர். பரதம் ஆடும் பெண்கள் உடல இடுப்புக்குக் கீழே பாம்பின் அடிப்பாகத்தை போல் உறுதியாக இருக்க வேண்டும் இடுப்புக்கு மேலே அவர்களின் கைகளும் முகமும் லாவகமாக சுற்றி சுற்றி ஆட வேண்டும் என்பது பரதக் கலையின் இலக்கணம் ஆகும்.

பாம்பின் மேனி வண்ணத்தைப் போன்ற உடையுடன் தலையில் அதன் படம் போன்ற தலையலங்காரத்தைப் பொருத்தி நெளிந்து நெளிந்து பல்வேறு கரனங்களைப் புகுத்தி நடனம் ஆடுகின்றனர். வழிபாட்டில் ஆடப்பட்ட சடங்கியல் கலையாக *[ritual art]* இருந்த பாம்பு நடனம் இப்போது நிகழ்த்து கலையாக *[performance art]* மேடையில் ஆடப்படுகிறது.

டிராகன் டான்ஸ்

சீனாவில் புத்தாண்டு அன்று நடத்தப்படும் பாம்பு நடனத்தால் [டிராகன் டேன்ஸ்] அங்கு மழை, வெள்ளம், புயல் போன்றவற்றின் பாதிப்பில் இருந்து நாக தெய்வம் தம்மை காப்பாற்றும் என்று நம்புகின்றனர். துணியால் பாம்பின் உருவத்தை பல மீட்டர் நீளத்துக்குச் செய்து அதனை மனிதர்கள் நீண்ட கழிகளால் துணியை உயர்த்தி பிடித்து உள்ளே நிறு தம்மை மறைத்த படி அவர்கள் ஆடும்போது பாம்பு நெளிந்து நெளிந்து ஆடுவதாகத் தோன்றுகிறது. தாய் ச்சி, சூறாவளி, மேகக் குகை எனப் பல வகை பாம்பு நடனங்களை சீனர் ஆடுகின்றனர்.



நாகத்தின் அதீத தோற்றங்கள்

நாகத்தை வழிபடு பொருளாகத் தெரிவு செய்தவுடன் மனிதன் தனது விருப்பத்துக்கேற்ப அதன் உருவத்தை மாற்றினான். பாம்புக்கு காத்து கேட்காது ஆனால் நாகம் நமது கடவுள் அதற்கு நன்றாகக் காது கேட்கும் என நம்பினான். நமது குறைகளைக் கேட்டு நிவர்த்திக்கும் தெய்வம் அல்லவா எனக் கருதி தான் வணக்கும் நாக தெய்வத்தின் உருவத்துக்கு நீண்ட காது வைத்தான்.

நாகம் மன்னிக்கும் தெய்வம் கிடையாது; அது தண்டிக்கும் சக்தி உடையது என்று நம்பியதால் அது தனது வாயிலிருந்து நச்சை நெருப்புப் போல உமிழும். எகிப்து சீனா போன்ற நாடுகளில் வாங்கப்படும் நாக் தெய்வங்கள் நெருப்பை உமிழும் தொர்த்ரத்தை இச்செயல்பாட்டையும் நாக தெய்வத்தின் உருவத்தில் பிரதிபலித்தான்

பாம்பு மெல்ல ஊர்ந்து போவது அதன் இயல்பு; ஆனால் கடவுளான பின்பு அதற்கு வேகம் முக்கியம் என்பதால் அதற்கு சிறகுகளைப் படைத்தான்.

மாயன் நாகரிகத்தில் நாகத்தை குகுல்கான் என்ற பெயரில் சிறகுள்ள பறக்கும் பாம்பாக கொண்டு வழிபட்டனர். அஜ்டேக் இனத்து மக்கள் குவேட்சால்கொஎதி என்ற பெயரில் நாகத்துக்கு சிறகுகள் வைத்து வழிபட்டனர்.

சீனாவில் சிறகு காது என்று பாம்பின் தோற்றத்தையும் செயல்பாட்டுத் தகுதியையும் உயர்த்தினர். ஹான் வம்சத்து மன்னர்கள் தங்களை நாகத்தின் வழித்தோன்றல்களாக கருதியதால் நாகத்துக்கு அங்கு நன்மதிப்பு உண்டாயிற்று. அங்கு நாகம் என்பது நன்மை, வளமை, விழிப்புணர்வு, மரியாதை ஆகிய பண்புகளின் உருவமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் ஆதி மனிதன் காலத்தில் இருந்து புராணங்கள் எழுதப்பட்ட காலம் வரை நாகத்தை ஐந்து தலை நாகம் என்றும் ஆயிரம் தலை நாகம் என்றும் உருவமைத்து அதன் மிகை ஆற்றலை வெளிப்படுத்தினான். இவ்வியல்பு எல்லா நாடுகளிலும் வாழ்ந்த மனிதர்களிடம் நாக் வழிபாடு தோன்றியது முதல் இருந்தது. [இன்றைக்கு இவ்வியல்பு தம் அரசியல் கட்சி தலைவருக்கு டாக்டர் பட்டம் முதலான பட்டங்களை அளிப்பது;

தொலைநிலைகல்வியில்படித்ததாகச்சொல்லிமுதுகலைப்பட்டத்தைபோட்டுகொள்வது என மாறிவிட்டது].

நிறைவு

நாக வழிபாடு ஆதி மனிதர் காலம் தொட்டு இன்று வரை பல மாற்றங்களை அடைந்து தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. இன்று நாகர் உருவத்தில் மோதிரம் அணிதல் தலையணி அணிதல் என்று நாகரிகமயமாகிவிட்டது. நாகர் வழிபாடு தென்னிந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வட மாநிலங்களில் பூர்வ குடிகள் நாக வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றன. மற்ற நாடுகளில் கிறிஸ்துவம் இஸ்லாம் பரவிய பின்பு நாகர் வழிபாடு மறைந்துவிட்டது. நாகத்தை இவ்விரு சமயங்களும் சைத்தான் சைத்தான் என்று மாற்றுப் பண்புடையனவாக பிரச்சாரம் செய்தன. ஆப்பிரிக்காவில் நாக் வழிபாடு இன்றும் உள்ளது. கீழை நாடுகளில் பவுத்தம் பரவிய இடங்களில் நாக வழிபாடு செல்வாக்குடன் திகழ்கிறது.

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*
9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*

10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*120*
2.	*ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	*மகிழ் பேரின்பம் (poems)*	*200*
4.	*பொன் வேலி (poems) நூல்கள்*	*200*
5.	*திருக்குறள் கதைகள் - பகை மாட்சி*	*100*

தே.ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

எளிய முறையில் யாப்பறிவோம்!

நெருப்பலையார். இராம இளங்கோவன்
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம்-29.

மருட்பா, நூற்பா

நாம் யாப்பிலக்கண இறுதி பாடத்தின் இறுதிக்கு வந்துவிட்டோம். பா வகைகள் நான்காகும். இருப்பினும் மருட்பா, நூற்பா பற்றியும் பெயரளவில் தெரிந்து வைத்துக் கொள்வோம். இதுவரை சுண்டக் காய்ச்சிய பாலாக, தேன்துளிகள் போல, சுருக்கமாக அதே வேளையில் சொல்ல வேண்டியதைச் சொல்லி, புரிய வைக்க வேண்டியதைப் புரிய வைத்து, மரபுப் பாக்கள் எழுத எவை தேவையோ அவையை மட்டும் வடிகட்டி எடுத்துப் பயிற்சி எடுத்தோம். இனி பாடங்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்து, எழுதிப் பார்த்துப் பயிற்சி எடுத்தால் கண்டிப்பாக மரபுப் பாவலர்களாக மாறி விடலாம். ஆகவே, எதிலும் பயிற்சி இன்றியமையாதது என்பதை உணருங்கள்.

மருட்பா:

வெண்பாவும் ஆசிரியப் பாவும் மயங்கி வருதலால், இரு பாக்கள் மயங்கி அமைவதே மருட்பாவாகும். ஆசிரிய அடி இரண்டாய் அதுவும் ஈற்றயலடி(ஈற்றடிக்கு முன்புள்ள அடி) மூன்று சீருடைய சிந்தடியாக வரும். மருள் என்றால் மயங்குதல் என்று பொருளாகும். மருட்பாவைப் புரிந்து கொள்ள ஒரு இலக்கண நூற்பாவைப் பார்ப்போம்.

வெள்ளை முதலா ஆசிரியம் இறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்.

இதில், புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ ஆகிய இந்நான்கு பொருள்களின் மேல் வெண்பாவாய் முன் வந்து, அகவலாய் முடியுமாயின் மருட்பா என்பர். இரு பாக்களின் அடிகளும் சமமாகப் பெற்று வருவது சமநிலை மருட்பா ஆகும். குறைவான வெண்பா அடிகளுடன் மிகுதியான அகவல் அடிகள் பெற்று வந்தால், வியநிலை மருட்பா(வியன்- ஏற்றிழிவு) ஆகும்.

இவை நான்கு பொருளன்றி வேறு பொருள்களில் வாரா. புறநிலை வாழ்த்து என்பது, ஒருவனை முன்னிறுத்தி அவனையும் அவனின் பிள்ளையையும் வாழ்த்திப் பாடுவதாகும். கைக்கிளை என்பது காமம் பற்றியதாகும். உண்மைப் பொருளை வற்புறுத்தி வாழ்த்துவது வாயுறை வாழ்த்து ஆகும். பெரியோர் அறிவுறுத்துவது செவியறிவுறூஉ வாழ்த்து ஆகும். இரண்டடிக்கோர் எதுகையாக வரும். இந்த நான்கு வகை மருட்பாக்களை வள்ளலாரின் அருட்பா நூல்களில் காண்க. இப்பொழுது என்னுடைய சமநிலை வாழ்த்து மருட்பா பாடல் ஒன்று மட்டும் காண்போம்.

சமநிலை வாழ்த்து மருட்பா பாடல் கீழே:
நாடும் நலம்பெற நற்றமிழ் போற்றிட
வீடும் உயர்ந்திட வீறுடன்- நாடிடும்
பிள்ளையை வளர்த்த பெற்றோர்
வள்ளலாய்ச் சிறந்து வாழியே என்றுமே!
(நெருப்பலையார்)

இப்பாட்டில் முதல் இரண்டடி வெண்பாவாகவும், அடுத்த இரண்டடி ஆசிரியப் பாவாகவும் சமமாக (இணையாக) வந்ததால் இது சமநிலை மருட்பா ஆயிற்று. அடுத்து, வியனிலைக் கைக்கிளை மருட்பாவில் என்னுடைய ஒரு பாட்டைக் காண்போம்.

வியனிலைக் கைக்கிளை மருட்பா பாடல் கீழே:
பாலினை நெஞ்சில் பயிரிடும் பெண்வயலே!
வாலைமீன் போன்ற புருவமுடை- மாலைவெயில்
கோலை நிமிர்த்தும் குமரியே வாயென்
கோல மயிலே குன்றாய்
வளர்ந்த செல்வமே வாயிழை நோக்கே!
(நெருப்பலையார்)

கைக்கிளைப் பொருள்மேல் வெண்பா அடிகள் குறைந்து, ஆசிரிய அடி மிகுந்ததால் இது வியனிலை மருட்பா ஆயிற்று. தொடர்ந்து, என்னுடைய சமநிலை வாயுறை வாழ்த்து ஒன்றைப் பார்ப்போம்.

சமநிலை வாயுறை வாழ்த்து மருட்பா கீழே:
பொங்கும் கடலென பொங்கும் வாழ்வினை
எங்கும் நிறைந்தே இனிதென- மங்கிடா
பொன்னொளிர் நாளும் பொலிந்திட
இன்பமாய் பெரும்பயன் என்றும் தருமே!
(நெருப்பலையார்)

வாயுவை வாழ்த்து மருட்பாப் பாடலை அடுத்து, என்னுடைய செவியறிவுறூஉ மருட்பா ஒன்றைக் கீழே காண்போம்.

வியனிலை செவியறிவுறூஉ மருட்பா பாடல்:
வானுறை தெய்வம் வரமும் கொடுத்திட
வானுறை மாரியாய் வந்துசெல்வம் - தானடைந்தே
வளமுடன் நலமுடன் வாழ்ந்திட வேண்டி
உளமும் உவந்தே உயர்ந்துமே
களம்பல வென்று கனிந்து வாழ்கவே!

மருட்பாவில் வருகின்ற வெண்பாவானது இன்னிசை வெண்பாவாக இருப்பினும்,

வெண்பா முடிகின்ற பொழுது வெண்பாவினது ஈற்றடியின் இறுதியில் அவ்வடியின் எதுகைப் பெற்ற தனிச்சொல் வரும் என்பதை உணர்க. இனி நூற்பாப் பற்றிச் சுருக்கமாக அறிவோம்.

நூற்பா:

வடமொழியில் சூத்திரம் என்று சொல்லப்படுகின்ற நூற்பாவானது குறைந்த எழுத்துகளால் அமைந்த சொற்றொடராய்ப் பற்பல பொருள் செறிந்த, திட்ப நுட்பம் சிறந்து, அடி தொடை ஏதுமின்றி அகவற்பா போலவே வருவதாகும். ஆத்திசூடி போல ஓரடியிலும் வரும். பொருளை இறுகப் பிணைத்து நிற்பது என்ற பொருளாகும். நூற்பா என்ன என்பதைக் குறிக்கும் விளக்கப் பாடலொன்றை அறிவோம். இப்பாடலை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்.(நூற்பா)

சூத்திரம் எனும் நூற்பாவில் ஒரு பொருளையே கூறுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. சூத்திரம் என்ற நூற்பா கண்ணாடியின் நிழற்போல விளங்கத் தோன்றி ஆராயாமல் பொருள் நன்றாக விளங்குமாறு யாப்பினது கண்ணே தோன்ற யாப்பதாகும். இனி அடுத்த பாடத்தில் தனிப்பாடல்களின் பாடல்களை மட்டும் எடுத்துக் காட்டாக வழங்குவேன். பாடல் அமைந்த வகையை உள்வாங்கி எழுதிப் பழக வேண்டும்.

இனி அடுத்த பாடத்தில் புதுவகைச் சார்ந்த இசைப்பாடல்களான தனிப்பாடல்கள் பற்றியும் அறிந்து கொள்வோம். யாப்பிலக்கணம் வளரும்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

தவறின்றித் தமிழ் எழுதுவோம்

பி. டி. தானப்பன்

தவறின்றித் தமிழ் எழுதுவோம் (தொடர் 4)

தமிழ் அறிஞர்ப் பெருமக்களே, தமிழ்ப் பேராசிரியர்ப் பெருமக்களே, தமிழ் ஆசிரியர்ப் பெருமக்களே, தமிழ் ஆர்வலர்களே, நீங்கள் செல்பேசியையும் கணினியையும் பயன்படுத்துவோராக இருப்பின் புலனங்களிலும் முகநூல்களிலும் இணையதளங்களிலும் படவரிகளிலும் கீச்சகங்களிலும் இன்ன பிறவற்றிலும் தமிழ் படும் பாட்டை நன்கு அறிந்திருப்பீர்கள்!

எழுத்துப் பிழைகள், மாற்றெழுத்துகள், ஒற்றுப் பிழைகள், சொற்றொடர்ப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள், பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுதல், தமிழ் மொழியை ஆங்கிலத்தில் எழுதுதல் போன்ற ஏராளமான இன்னல்களுக்குத் தமிழன்னை ஆளாகித் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து உங்கள் மனம் சொல்லொணா வேதனையுறுவதை உணர்ந்திருப்பீர்கள்.

தமிழர்களாகிய நாம் நமது தமிழ் மொழி மீது சிறிது அக்கறை செலுத்தினால் தமிழர்கள் அனைவருமே நல்ல தமிழில் எழுதித் தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்க்க முடியும்.

நல்ல தமிழா? அப்படியென்றால் கெட்ட தமிழ் என்று ஒன்று இருக்கிறதா என்னும் ஓர் வினா எழுவது இயற்கை. கெட்ட தமிழ் என்று ஒன்று இல்லை. ஆனால் தவறாக எழுதக் கூடிய, தவறாக படிக்கக்கூடிய, தவறாக பேசக் கூடிய தமிழ் எதுவும் நல்ல தமிழ் ஆகாது. நம்மில் பலரும் பள்ளியில் படிக்கும் போது ஏனோதானோ என்று ஆசிரியர் சுட்டிக்காட்டும் பகுதிகளை மட்டும் மனனம் செய்து, போதுமான மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியும் பெற்று விடுகின்றனர். ஆனால் கல்லூரிப் படிப்புக்குப் பிறகு அல்லது ஏதேனும் ஒரு தொழிற் படிப்புக்குப் பிறகு, தமிழ் நூல்களைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அதனால் பின்னாளில் அவர்கள் தமிழைச் சரியாகப் படிக்கவும் எழுதவும் முடியாமல் தவிக்கின்றனர். ஒற்றுப் பிழைகள், சொற்றொடர்ப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள், லகர, ளகர, ழகர, யகரப் பிழைகள் போன்ற பிழைகள் அவர்களுக்குத் தாராளமாக ஏற்படுகின்றன.

தற்காலத்தில் தமிழ் மொழி என்பது நமது தாய் மொழி என்னும் உணர்வும் அதனைப் பேணிக் காப்பது நமது கடமையாகும் என்பதையும் அறியாமல் தமிழை ஒரு பொருட்டாகவே மதிக்காத தன்மையும் நீடிக்கிறது. எந்த மொழியைப் படித்தால் ஏராளமாகப் பொருளீட்ட முடியும் என்ற கோணத்திலேயே பிள்ளைகளைப் பெற்றோர் பள்ளியில் சேர்த்து விடுகின்றனர். எந்த ஒரு குழந்தையும் , "நான் இந்திதான் படிப்பேன்; ஆங்லம்தான் படிப்பேன்; தமிழ் படிக்க மாட்டேன்" என்று அடம் பிடிப்பதில்லை. எல்லாப் பெற்றோரும் தங்களுடைய மகிழ்சிக்காகவும பெருமைக்காகவுமே தங்களது குழந்தைகளுக்கான மொழியையும் பாடங்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் தமது தாய்மொழி, தாங்கள்

படிக்கும் பிறமொழி இரண்டிலுமே தேவையான தகுதியை வளர்த்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றன. அதனால் அந்தக் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை பாழ்பட்டுப் போய்விடுகிறது.

பல தொல்லைகளை எதிர்கொண்டுத் தமது குழந்தைகளின் எதிர்காலமே தங்கள் மகிழ்ச்சி என்பதை மனதில் கொண்டு ஏராளமாகச்செலவு செய்து, சொல்லொணாத்துயரங்களை அனுபவித்துப் பிள்ளைகளைப் பெற்றோர் படிக்க வைக்கின்றனர். ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் படித்து முடித்து, ஒரு வேலைக்குச் சென்று பொருளீட்டத் தொடங்கியதும் பெற்றோரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இதற்குக் காரணம் அன்பு என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பெற்றோர் வேண்டாம்; சொந்த பந்தங்கள் வேண்டாம்; அக்கம் பக்கத்தார் வேண்டாம் என்று எல்லோரையும் புறந்தள்ளிவிட்டு, யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் இந்தச் சமுதாயத்தைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்க்கை போகிற போக்கில் காலந் தள்ளுகின்றனர்.

தமிழ் மொழி நமக்கு வாழும் கலையைச் சொல்லித் தருகிறது. "அறம் செய விரும்பு; ஆறுவது சினம்; இயல்வது கரவேல்; ஈவது விலக்கேல்" என்பதெல்லாம் என்ன?

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்; ஒருவரையும் பொல்லலாங்கு சொல்ல வேண்டாம்; மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்; வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் " என்பதெல்லாம் என்ன? வாழ்க்கையில் நாம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள். ஆனால் இந்த நெறிமுறைகளைப் பற்றி இன்றைய இளைஞர்களும் சரி, பெற்றோர்களும் சரி, யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நமது முன்னோர்கள் சொல்லிச் சென்ற நல்ல நல்ல கருத்துகளை மனதில் நிறுத்தி அவற்றை நம் வாழ்க்கையில் பின்பற்றினால் வாழ்வு சிறக்கும்.

தமிழ் மொழியில் உள்ள கவிதைகளையும் கட்டுரைகளையும் புதுக்கவிதைகள், ஹைகூ கவிதைகள் என்னும் துளிப்பாக்கள், சிறுகதைகள், புதினங்கள் போன்றவறறைத் தவறின்றிப் படிக்கும் போதும் அவற்றை ஆழமாகப் புரிந்து கொள்ளும் போதும் நமக்கு இனம் தெரியாத ஒரு மகிழ்ச்சி ஏற்படுவதை நனகு உணர முடியும்.

எனவே தமிழர்கள் அனைவரும் தவறின்றித் தமிழை எழுத, படிக்க, பேச பழகிக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், இளம் எழுத்தாளர்கள், மாணவர்கள், அச்சகப் பணியாளர்கள், கணினியில் பணிபுரிவோர், ஊடகத் துறையில் பணிபுரிவோர், பதிப்பகத்தார் போன்றவர்களுக்கு இது மிக மிக இன்றியமையாததாகும்.

தமிழ் மொழியைக் கன்னித் தமிழ், தென் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தெய்வத் தமிழ், முத்தமிழ், மூவாத் தமிழ் என்றெல்லாம் புகழப்படும் அளவுக்கு அது சிறந்து விளங்குகிறத என்பதை இளம் எழுத்தாளர்கள் உணர வேண்டும்.

ஒரு மொழிக்கு இலக்கணம் என்பது மிகவும் இன்றியமையாதது. இலக்கணம் இல்லாத மொழி அழிந்துபட்டுவிடும். தமிழர்கள் யாருமே தமிழ் படிக்கவில்லை என்றால், தமிழ் இலக்கணம் படிக்க வில்லை என்றால் தமிழ் மொழி ஐம்பது ஆண்டுகளில் இல்லாமல் போய்விடும். பரவாயில்லையா? உலகில் முதலில் தோன்றிய மொழி என்றும் உலகின் மிகச்சிறந்த மொழி என்றும் தமிழர் அல்லாதவர்கள் பாராட்டுகிறார்களே அதெல்லாம் பொய்யா?

உங்கள் குழந்தையை நீங்கள்தானே பாதுகாப்பாக வளர்க்க முடியும்? உங்கள் குழந்தையை நீங்கள் பார்த்துக் கொள்ளாவிட்டால் வேறு யார் பார்த்துக் கொள்வார்கள்?

மொழியின் இன்றியமையாமையை வலியுறுத்துவதற்காகத்தான் வள்ளுவப் பெருமான்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்பதைத் தமது குறள் வாயிலாக எடுத்துச் சொல்கிறார்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

என்று சொல்லுகிறார்.

செய்தித் துறையில் பணியாற்றுபவர்களும் தாங்கள் பேசும்போதும் எழுதும்போதும் ஏராளமான பிழைகளைச் செய்கின்றனர்.

அவர்களில் பலர், ‘‘செய்திகள் வராது" என்றும்,

"இரண்டு மோட்டார் வண்டிகள் தொடர் வண்டியுடன் மோதிற்று. என்றும் எழுதுகின்றனர்.

"செய்திகள் வாரா "என்றும்,

"இரண்டு மோட்டார் வண்டிகள் தொடர் வண்டியுடன் மோதின" என்றும் எழுத வேண்டும். அதாவது, ஒரு சொற்றொடரை பன்மையில் தொடங்கினால் அதனைப் பன்மையில்தான் முடிக்க வேண்டும். செய்திகள் என்பது பன்மை. அதனால் "வாரா " என்னும் பன்மையில்தான் சொற்றொடர் முடிய வேண்டும். அதேபோல "வண்டிகள்" என்பது பன்மை. எனவே "மோதின" என்னும் பன்மையில்தான் முடிய வேண்டும்.

மகிழுந்தும் மிதிவண்டியும் ஒன்றோடு ஒன்று மோதியது என்று எழுதக்கூடாது. மோதின என்று எழுத வேண்டும். ஏனென்றால் மகிழுந்து, மிதிவண்டி ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்டவை. அதாவது பன்மை.

என்னும் சொல்லை எங்கே பயன்படுத்த வேண்டும் என்பதைப் பார்ப்போம். "பூனையோ அல்லது நாயோ வீட்டுக்கு வந்திருக்கிறது" என்னும் சொற்றொடரில் அல்லது என்னும் சொல் வரவேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அந்தச் சொற்றொரில் பூனையோ நாயோ என்று ஐயத்தை ஏற்படுத்தும் ஓகாரம் வருகிறது. இப்படி ஐய ஓகாரம் வரும்பொழுது ‘அல்லது’ என்னும் சொல் வரவேண்டிய தேவை இல்லை.

"இது எல்லாம்" என்று எழுதுவது தவறு. ‘எல்லாம்’ என்பது பன்மை. ஆகவே பன்மையில் முடியும் சொற்றொடர் பன்மையில்தான் தொடங்கப்பட வேண்டும். அதனால், ‘‘இது எல்லாம்" என்று எழுதாமல் "இவை எல்லாம்" என்று எழுத வேண்டும்.

"கோலார் என்ற இடத்தில் தங்கம் கிடைத்தது" என்று எழுதினால், ‘‘கோலார் என்று அழைக்கப்பட்ட இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன் தங்கம் கிடைத்தது; இப்போது கிடைக்கவில்லை" என்று பொருளாகிறது. ‘என்ற’ என்னும் சொல், ‘‘என்று அழைக்கப்பட்ட" என்னும் இறந்த காலத்தைக் குறிக்கிறது. "கோலார் என்னும் இடத்தில் தங்கம் கிடைத்தது" என்று எழுதினால், ‘‘கோலார் என்று இன்றும் அழைக்கப்படும் இடத்தில் அப்போது தங்கம் கிடைத்தது; ஆனால் இப்போது கிடைக்கவில்லை" என்று பொருளாகிறது.

"கூட்டங்கள் பலமுறை நடந்திருக்கிறது" என்று ஒரு மெத்தப் படித்த தமிழ் ஆய்வறிஞர் பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதனை அவருக்கு அவரது மனம் புண்படாதவாறு சுட்டிக் காட்டினேன்.

இருப்பினும் அவர் எனது சுட்டிக் காட்டலை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. "கூட்டங்கள் பலமுறை நடந்திருக்கின்றன" என்று பேச வேண்டும் அல்லவா? ஆனால் பன்மைச் சொற்களில் தொடங்குகின்ற அனைத்துச் சொற்றொடர்களையுமே அவர் ஒருமையில்தான் முடிக்கிறார். அவர் மட்டும் அல்ல, பலரும் அப்படித்தான் பேசுகின்றனர்.

தமிழ் படிக்கும் பலருக்கும் குழப்பத்தை உண்டாக்குவது குற்றியல் உகரமும் குற்றியல் இகரமும்தான். குற்றியல் உகரம் என்றால் "குறைந்த ஓசையை உடைய 'உ' என்னும் எழுத்து" என்பது பொருளாகும். அதாவது, "தனக்கு இயல்பாக இருக்கும் ஓசையில் இருந்து குறைந்து ஒலிக்கும் ஓசையை உடைய 'உ' என்னும் எழுத்து" என்பது பொருளாகும். தவிர, முற்றியல் உகரம் என்பதும் உண்டு.

இது போலவே குறைந்து ஒலிக்கும் 'இ' என்னும் எழுத்து குற்றியல் இகரம் எனப்படுகிறது.

இந்தக் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் மரபுக் கவிதை எழுதுவோர், அசை, சீர் அமைத்துக் கவிதை எழுதப் பயன்படுகிறன.

சரி, குற்றியல் உகரச் சொற்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துகளும் உகரம் ஏறிய உயிர்மெய் எழுத்துகள் ஆகும். இந்த ஆறு எழுத்துகளும் எந்தச் சொல்லில் இறுதியாக உள்ளதோ அந்தச் சொல் குற்றியலுகரம் ஆகும். ஆனால் இதை மட்டுமே வைத்து குற்றியலுகரம் என்ற முடிவுக்கு வர முடியாது.

அதாவது, சொல்லின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும்.

ஈற்றயல் எழுத்து, அதாவது கடைசி எழுத்துக்கு முன் எழுத்து நெட்டெழுத்தாகவோ, வல்லின மெய்யெழுத்தாகவோ, மெல்லின மெய்யெழுத்தாகவோ, இடையின மெய்யெழுத்தாகவோ, ஆய்த எழுத்தாகவோ, உயிர்மெய் எழுத்தாகவோ இருக்க வேண்டும்.

அப்படி இருக்குமானால் ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு அந்தக் குற்றியலுகரம் எந்த வகையைச் சார்ந்தது என்று முடிவு செய்யலாம்.

இந்தக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
2) வன் தொடர் குற்றியலுகரம்.
3) மென் தொடர் குற்றியலுகரம்.
4) இடைத் தொடர்க் குற்றியலுகரம்.
5) ஆய்தத் தொடர் குற்றியலுகரம்.
6) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

1) நெடில் தொடர்க் குற்றியலுகரம் என்பது இரண்டு எழுத்துகளால் அமைந்த ஒரு சொல்லாக இருக்கும். இதன் முதலெழுத்து நெட்டெழுத்தாக இருக்கும். கடைசி எழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றாக இருக்கும்.

எ. கா.: பாகு, மாசு, நாடு, மாது, பாபு, வேறு. இச் சொற்கள் அனைத்தும் இரண்டு எழுத்துகளால் அமைந்த சொற்கள் என்பதை அறிவீர்கள். இவற்றில் உள்ள முதல் எழுத்துகள் நெட்டெழுத்துகளாக உள்ளன. கடைசி

எழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஒன்றாக உள்ளன. ஆகவே இவை அனைத்தும் நெடில் தொடர்க் குற்றியல் உகரம் ஆகும். அதாவது பா, மா, நா, மா, பா, வே என்னும் நெடில் எழுத்துகளைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்துள்ளமையால் இவை நெடில் தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் ஆகும்.

2) வன் தொடர்க் குற்றியலுகரம் என்பது இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும் சொற்கள் ஆகும். அவற்றின் ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளில் ஒன்றைப் பெற்று வரவேண்டும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து, வல்லின மெய்யாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவை வன் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும். அதாவது வல்லெழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் எனப்படும்.

எ.கா.: சுக்கு, அச்சு, விட்டு, கழுத்து, கசப்பு, பற்று. வல்லெழுத்துகள் என்றால் வல்லின எழுத்துகள் என்று பொருள். வல்லின எழுத்துகள் என்பவை க, ச, ட, த,ப, ற என்னும் ஆறும் ஆகும்.

3) மென் தொடர் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும் சொற்கள் ஆகும். அவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து மெல்லின மெய்யாக இருக்கும். அப்படி இருந்தால் அவை மென் தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

எ. கா. : தெங்கு, பஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று.
மெல்லின எழுத்துகள் என்பவை ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறும் ஆகும்.

4) இடைத் தொடர் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து இடையின மெய்யெழுத்தைப் பெற்று வரும். இதுவும் இரண்டு எழுத்துகளுக்கு மேல் வரும்.

எ. கா.: செய்து, சார்பு, சால்பு, வீழ்து.

இடையின எழுத்துகள் என்பவை ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறும் ஆகும். இவற்றுக்கு எடுத்துக்காட்டுச் சொற்கள் மிகவும் குறைவாக உள்ளன.

5) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து ஆய்த எழுத்தைப் பெற்று வரும்.

எ. கா.: எஃகு, கஃசு.

இவற்றுக்கும் எடுத்துக்காட்டுச் சொற்கள் மிகவும் குறைவாக உள்ளன. கஃசு என்னும் சொல் தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லை.

6) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். இவற்றின் ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து ஏதேனும் ஓர் உயிர்மெய் எழுத்தைப் பெற்று வரும்.

எ. கா. அழகு, பாலாறு, கரடு, தெரியாது, பயறு.

அழகு என்னும் சொல்லில் உள்ள ழகரம், அதாவது 'ழ' என்னும் எழுத்து உயிர்மெய் எழுத்தாகும். இந்த உயிர்மெய் எழுத்து என்பது ழ் + அ = ழ ஆகும். இதில் உள்ள 'ழ்' என்னும் மெய் எழுத்தை நீக்கிவிட்டால் 'அ' என்னும் உயிரெழுத்து மட்டுமே மிஞ்சும். அந்த உயிர் எழுத்தை மட்டும் பார்த்து இது உயிர் தொடர்க் குற்றியலுகரம் என்று காண வேண்டும். மேற்கண்ட எழுத்துகளில் அ, ஆ, என்னும் உயிர் எழுத்துகள் ஈற்றெழுத்துக்கு முன் எழுத்துகளாக வந்திருப்பதைக் காண முடியும்.

இனி, குற்றியலிகரம் என்றால் என்ன என்று பார்ப்போம். குறைந்த ஓசையை உடைய உகரம் குற்றியலுகரம் என்பது போல, குறைந்த ஓசையை உடைய இகரம் குற்றியலிகரம் ஆகும்.

அதாவது, குற்றியலுகரச் சொற்களுக்கு முன்பு யகரத்தை முதலாகக் கொண்ட சொல் வருமானால் அந்தக் குற்றியலுகரமானது இகரமாகத் திரியும். அந்த இகரம் தனது இயல்பில் இருந்து குறுகி ஒலிப்பதால் அது குற்றியலிகரம் எனப்படுகிறது.

எ. கா. : வாத்து + யாது = வாத்தியாது. நாடு + யாது = நாடியாது.
'வாத்து' என்னும் சொல்லின் 'து' என்னும் எழுத்தில் உள்ள உகரமானது இகரமாகத் திரிந்தது.

'நாடு' என்னும் சொல்லின் 'டு' என்னும் எழுத்தில் உள்ள உகரமானது இகரமாகத் திரிந்தது. இந்த வகையான சொற்கள் கவிதையில் வருமேயன்றி உரைநடையில் வருவதில்லை.

அடுத்து, முற்றியல் உகரத்தைப் பார்ப்போம். முற்றியல் உகரம் என்பது வேறொன்றும் இல்லை; முற்றிலும், அதாவது உகரத்தின் ஒலியை முழுமையாகக் கொண்டிருப்பது என்று பொருள். அதாவது, உயிரெழுத்தாகிய உகரம் தனியே இருந்தாலும் உயிர்மெய் எழுத்தில் இருந்தாலும் அது முற்றியல் உகரம் எனப்படும்.

கு, சு, டு, து, பு, று என்னும் ஆறும் வல்லின உகரங்கள்.
ங, ஞு, ணு, நு, மு, னு என்னும் ஆறும் மெல்லின உகரங்கள்.
யு, ரு, லு, வு, ழு, ளு என்னும் ஆறும் இடையின உகரங்கள்.

அதாவது, இரண்டு குறில் எழுத்துகள் இணைந்து ஒரு சொல்லாக வரும்போது அவற்றின் ஈற்றில் உள்ள வல்லின உகரங்கள் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களில் உள்ள ஈற்றெழுத்து மெல்லின உகரத்தைக் கொண்டதாக இருப்பின் அவையும் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களில் உள்ள

ஈற்றெழுத்து இடையின உகரத்தைக் கொண்டதாக இருப்பின் அவையும் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும். இந்த உகரங்கள் யாவும் முற்றியல் உகரம் எனப்படும்.

இந்த வேறுபாடுகளை மனதில் கொண்டு இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்துப் புரிந்து கொண்டால் தெளிவு ஏற்பட்டுவிடும்.

"தமிழ்ப் பெயர்கள்"

மா.மாரிராஜன்

தாய் மொழியில் ஒருவரது பெயர் இருப்பது பொதுவான வழக்கம். ஆனால் தாய்மொழியையே ஒருவர் தம் பெயராக வைக்கும் வழக்கம் தமிழுக்கும் தமிழர்களுக்கும் உண்டு. தமிழ்மாறன், முத்தமிழ் செல்வி, செந்தமிழ் செல்வன், தமிழரசன் என்ற பெயர்கள் இன்று இயல்பாகவே பலருக்கும் உண்டு.

தமிழ் மொழியை பெயராக வைக்கும் இவ்வழக்கம் 1500 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொன்றுதொட்டு இருக்கிறது.. வரலாறு, இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, என்று தொல்லியல் ஆவணங்களாக தமிழ்மொழி ஒருவரின் பெயராக இந்நிலத்தின் பெயராகவே பதிவு செய்யப்படுகிறது. புலவர்கள், ஆன்றோர், சான்றோர், அரசர்கள் மற்றும் பலர் தமிழை தங்கள் பெயரோடு இணைத்துப் பெருமைப்படுகின்றனர். தமிழ் மொழியைத் தன் பெயராகக் கொண்டவர்கள் பட்டியல்.

கி.பி.5 ஆம் நூற்றாண்டு. காரைக்கால் அம்மையார். மூத்தத் திருப்பதிகங்கள் பாடியவர். இவர் தான்பாடிய பாடல்களை செந்தமிழிலால் பாடினேன் என்று சொல்லி தன்னை செந்தமிழ் அம்மை என்று பெயர் சூட்டி அடையாளப்படுத்துகிறார்.

கி.பி.7 ஆம் நூற்றாண்டு. தேவாரம் பாடிய மூவரில் ஒருவரான திருஞானசம்பந்தர். இவர் தன் பெயராக நற்றமிழ் ஞானசம்பந்தன் என்று கையொப்பமிடுகிறார்.

கி.பி.8 ஆம் நூற்றாண்டு. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரம். பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன். இவர் தன்னை தீந்தமிழால் காதுகழுவினேன் என்கிறார். மேலும் தன் பெயரை தமிழாபரணன் என்றும் அறிவிக்கிறார்.. தமிழ் மொழியை ஆபரணமாகக் கொண்டவராம்.. (சின்னமனூர்ச் செப்பேடு)

கி.பி. 9 ஆம் நூற்றாண்டு. தமிழுக்காக தன் உயிரை தானமாகக் கொடுத்த பல்லவன் நந்திவர்மன். (நந்திக்கலம்பகம்)

கி.பி.10 ஆம் நூற்றாண்டு. சோழப் பெருவேந்தர் இராஜராஜச் சோழர். தன் பெயரை தண்டமிழ் நாடன் என்று சொல்கிறார். (திருக்கோவிலூர் கல்வெட்டு)

முதலாம் இராஜாதிராஜனுக்கு தமிழ் பரணி கொண்டோன் என்ற பெயர் உண்டு.(vol 5 /607)

பாண்டிய மன்னன் வீரபாண்டியனுக்கு அமைச்சராகவும் படைத்தலைவராகவும் இருந்த ஒருவரின் பெயர் தமிழவேள்.(Vol 14/87)

கி.பி.12 ஆம் நூற்றாண்டு. இரண்டாம் இராஜராஜர் தன்னை முத்தமிழ் தலைவன் என்கிறார்.

12 ஆம் நூற்றாண்டு. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்கு இருக்கும் பெயர்.. செழுந்தமிழ் தென்னவன் மற்றும் செந்தமிழ் சுந்தரபாண்டியன். இப்பாண்டியன்தான் கடிகைகளில் தமிழ் பாடம் கற்பிக்க "முத்தமிழ் ஆசிரியரான தமிழ் கரைகண்ட சாத்தனார் " என்பவரை ஆசிரியராக நியமித்து அக்கடிகைக்கு பொய்யாமொழி மங்கலம் என்னும் ஊரை தானமாக அளித்தவர்.

காலம் கி.பி. 1219. குலசேகரபாண்டியனுக்கு முத்தமிழ் கொண்டான் என்னும் பெயர் உண்டு.

கி.பி.13 ஆம் நூற்றாண்டு. காடவ குல வேந்தர். கோப்பெருஞ்சிங்கர். தன்னை தமிழ்நாடு காத்த பெருமான் என்கிறார். மேலும் பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன் என்றும் கல்வெட்டில் குறிப்பிடுகிறார்.

அரிகுலகேசரி பராக்கிரம பாண்டியனுக்கு, செழியன் தமிழ்நாடன் என்னும் பெயர் உண்டு. இவ்வாறாக.. தமிழ் மொழியை தன் பெயருடன் கொண்ட வரலாறு தொன்றுதொட்டு வழக்கத்தில் உள்ளது..

இணையத்தில் *'Grok 3 Beta'* மூலம் தேடிய விவரங்கள்:

இது தமிழையோ, தமிழர் நாகரீகத்தையோ குறைத்து மதிப்பிடும் செயலல்ல. விவாதத்தில் உண்மையை கண்டறியும் முயற்சி.

பதிவு ஆங்கிலத்தில் இருப்பதற்கு மன்னிக்கவும்.

1) Curriculum: Nalanda offered a multidisciplinary education, including:

** Buddhist Studies: Philosophy, metaphysics, and scriptures like the Tripitaka.*
** Vedas and Hindu Philosophy: Despite its Buddhist leanings, it taught Brahmanical texts, logic (Nyaya), and Sanskrit grammar.* Sciences: Astronomy, mathematics, medicine (Ayurveda), and metallurgy.*
** Other Subjects: Logic, linguistics, debate, and even practical skills like archery.*

2) Cumulative Longevity: The Pandya dynasty edges out others with a presence spanning over 2,000 years, though with significant gaps and regional focus rather than continuous imperial rule.

** Cultural Continuity: The Cholas (1,500+ years) are often highlighted in historical discussions for their enduring Tamil identity and intermittent dominance.*
** Continuous Rule: Among centralized empires, the Mughals (331 years) hold the record for the longest unbroken dynastic rule over a large part of India.*

If we prioritize cumulative duration across centuries, the Pandyas or Cholas take the crown. However, if you mean a dynasty with uninterrupted control over a vast region, the Mughals or Guptas might be more fitting.

3) Tamil-Brahmi inscriptions (sometimes called Tamizhi in Tamil), which are among the earliest written records of the Tamil language and a crucial part of South India's historical and linguistic heritage. Tamil-Brahmi is an adapted form of the Brahmi script, tailored to suit the phonetic structure of the Tamil language, a Dravidian tongue distinct from the Indo-Aryan languages of North India.

4) Gupta Literature - Love, dharma, nature, science, mythology

Sangam literature - Love, war, nature, heroism, ethics

5) Gupta Period: Represents a leap in temple-building, driven by Hindu consolidation and royal patronage. These temples influenced later styles (e.g., Khajuraho, Chola temples).

** Sangam Period: Lacks monumental temples due to its early timeline and cultural focus on poetry and war. Temple architecture in Tamil Nadu emerged later under the Pallavas (e.g., Mahabalipuram, 7th century CE), building on Sangam religious traditions.*

6) Medicine in Ancient Indian Literature (Vedic Period, c. 1500 BCE – 500 BCE)

The earliest references to medicine in Indian literature come from the Vedas, particularly the Rigveda and Atharvaveda, which blend spiritual, ritualistic, and practical approaches to healing.

The post-Vedic period saw the codification of Ayurveda ("Science of Life"), India's traditional medical system, in texts attributed to sages like Charaka, Sushruta, and Vagbhata. These works, often dated between 500 BCE and 500 CE, appear in Sanskrit literature and were refined during the Gupta Period.

7) Economic Integration: Trade unified India's diverse regions, balancing northern agrarian wealth with southern maritime and mineral resources.

** Cultural Diffusion: Sanskrit, Brahmi script, and Hinduism spread south, while Tamil goods and aesthetics influenced the north.*

** Global Reach: South India's international trade (e.g., with Rome) often passed through northern intermediaries, boosting India's ancient economy.*

8) Timeline Comparison: Literature Earliest Global Presence

Region Reached

Buddhist (Pali Canon) 3rd century BCE Sri Lanka, Hellenistic world
Vedic 4th–3rd century BCE (indirect) Persia, Greece (conceptual)
Epics (Mahabharata, Ramayana) 1st century CE Southeast Asia
Ayurvedic Texts 1st century CE (influence) Rome, Central Asia
Sangam Literature 1st century CE Sri Lanka

9) Vedic period is prior to Sangam period

10) Astrology:

** Originated: Vedic Period (c. 1500–1200 BCE) with celestial observation in the Rigveda and Vedanga Jyotisha.*

** Reason: Tied to Vedic rituals and timekeeping, predating systematic mathematics.*
** Mathematics:*
** Originated: Late Vedic Period (c. 800–500 BCE) with the Sulbasutras' geometric rules.*
** Reason: Emerged from practical needs of Vedic altar construction, slightly later than astrology's ritualistic roots.*

இப்பதிவுக்கு அப்படியே வரிக்கு வரி பதில் சொல்வோம்.

தமிழன் ரோமானியருடன் கடல் வணிகம் செய்தான் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இக்காலத்தில் வடவர்கள் யாரும் கடல் வணிகம் செய்ததில்லை. ஒருவேளை அவர்களுக்கு கடல் வணிகம் என்பதோ ஒரு கப்பலையோ அறிந்திருக்கவில்லை. அல்லது அவர்களுக்கு கடல் தாண்டினால் தோஷம் என்று நிலைப்பாடுகூட ஒரு காரணமாக இருக்கலாம்.

1.நாளந்தா பல்கலைக்கழகம் குருகுலமோ, வேதபாடசாலையோ ,பொதுமக்களின் கல்வி நிலையமோ அல்ல. பௌத்தர்களின் கல்விக்கூடம். ஏறக்குறைய இதேபோல் காஞ்சிபுரத்திலும் ஒரு கடிகை இருந்தது.

2. உலகத்திலேயே அதிகநாட்கள் அரசாண்ட பரம்பரை மதுரை பாண்டியர்கள் என்பது தொல்லியல் தரவுகளுடன் ஏற்கபட்ட ஒன்று.

3. தமிழ்நாட்டில் உள்ள தமிழி கல்வெட்டுகள் பொதுமக்களுக்கானது.அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பது உறுதியானது. வடக்கே உள்ள பிராமிக் கல்வெட்டுகள் ஒரு அரசனது சாசனம். பொதுமக்களால் அதை வாசிக்க இயலாது என்பதால் அதை வாசித்துக்காட்ட அரசுப் பணியாளர் ஒருவர் இருந்தார்.

4. குப்தர் கால நூல்களை விட சங்க இலக்கியங்களில் அறிவியல், மருத்துவம், வானியல், கணிதம் போன்ற தரவுகள் ஏராளமாக இருந்தன.

5. குப்தர்காலத்திற்கு முன்பே ஏராளமான கோவில்கள் இருந்ததை சங்க இலக்கியங்கள் பதிவு செய்கிறது.

6. அறுவை சிகிச்சை முதல் வெட்டுங்காயங்களை ஊசி நூல் கொண்டு தைப்பது வரை விபரங்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன..

7. வட இந்தியர்களுடன் வணிகம் செய்யும் காலத்திலேயே கூட வடஇந்தியர்கள்தான் தமிழகம் வந்தார்கள். இன்றைய வடக்கர்

வருகை போலவே.

8. சங்க இலக்கியங்களின் தரவுகளின்படி உலகம் முழுவதும் தமிழ் கலாச்சாரம் பண்பாடு பரவி இருந்தது என்பதற்கானத் தொல்லியல் சான்றுகள் உள்ளது.

9. அதேபோல் தமிழின் பல்வேறு வகைகள் சமஸ்க்ருத இலக்கியங்களிலும் பயன்பட்டுள்ளது. ரிக்வேதத்திலும், அசோகபிராமியிலும் ஏராளமானத் தமிழ் சொற்கள் உள்ளன.

10. ஜோதிடம் வானியல் கருத்துக்களும் கணக்கீடுகளும் முழுக்க முழுக்கத் தமிழர்களுடையது. அதாவது பிறப்பின் நேரத்தை வைத்து ஜோதிடம் கணிக்கும் முறை தமிழகத்தில் உள்ளது போல் வடக்கே இல்லை. பெயர் மட்டும்தான் வடமொழி. அதாவது சோறு என்பதை சாதம் என்று பெயர்மாற்றிவிட்டால் அரிசியே வடவர்களுக்கு சொந்தமாயிடுமா.?

மேலும்.மேலும்.. விரிவாகப் பேசலாம்.

வைணவம் வளர்த்த பெரியோர்கள் – திருக்கச்சி நம்பிகள் வைபவம்

தில்லி ஜனக்புரி சீனிவாசன்

மருவாருந் திருமல்லி வாழவந்தோன் வாழியே
மாசிமிருகசீரிடத்தில் வந்துதித்தோன் வாழியே
அருளாளருடன் மொழி சொல் அதிசயித்தோன் வாழியே
ஆறுமொழி பூதூரார்க்கு அளித்தபிரான் வாழியே
திருவாலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
திருக்கச்சி நம்பியிரு திருவடிகள் வாழியே!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" என்பது வள்ளுவம். உலகில் பிறந்த எல்லா மனிதர்களும் சமமானவரே! பிறப்பினால் வேறுபாடு கருதுவது மடைமை.

"அடிமையில் குடிமை அயல்சதுப்பேதி மாரில் குடிமையில் கடைமைப்பட்ட குக்கரில் பிறப்பரேலும் எம்பெருமான் அடியவரை உகப்பவன்.

எம்பெருமானுக்குக் கைங்கர்யம்(தொண்டு) செய்வது நமக்கு இயல்பானது. உண்ணும் சோறு, பருகும் நீர் போல அவனுக்குத் தொண்டு செய்யாமல் இருக்க முடியாது எனக் கருதினர் அடியவர்கள்.

நான்கு வேதங்களையும் கற்றிருந்தாலும் , எம்பெருமான் எல்லா உலகுக்கும் தலைவன், தான் அவனுக்குச் சொத்து என்னும் உணர்வற்றவர்களாய் இருப்பவர்களைக் காட்டிலும் மிகத் தாழ்ந்த

குடியிலே பிறந்தவர்களாயினும் எம்பெருமானுடைய திருவடியில் அன்பு செய்யும்படியான அடியவர்களையே பெரிதும் உகப்பான்.

அப்படிப்பட்ட நிலையில் திருக்கச்சி நம்பிகள் சென்னைக் கடுத்துள்ள பூவிருந்தவல்லியில்(தற்போது பூந்தமல்லி) வைசியர் குலத்தில் மாசிமாதம் மிருகசீரிட நட்சத்திரத்தில் அவதரித்தவர்.

ஆளவந்தாரின் நெருங்கிய சீடர். காஞ்சி தேவராசப் பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவர். எக்குலத்திலும் சிறந்ததான தொண்டக் குலமே மேலானதாகக் கருதியவர்.

ஆளவந்தார் திருவடிகளையே பற்றாகக் கொண்டு சாமான்ய விசேட சாத்திரங்களை அறிந்தவர். ஒருமுறை ஆளவந்தார் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளியிருந்த போது திருக்கச்சி நம்பிகளே ஆளவந்தார்க்கு இராமானுசரைக் காட்டிக் கொடுக்க, 'ஆம் இவன் முதல்வன்' என இராமானுசரைக் கடாட்சிக்க வழி செய்தவர்.

அர்ச்சாவதார எம்பெருமானுக்கு ஆலவட்ட (விசிறி வீசுதல்) திருத்தொண்டு செய்வதில் அளவிலா ஈடுபாடு கொண்டார். திருவரங்கம் பெரியகோயில் அழகிய மணவாளனுக்கு அத் திருத்தொண்டு செய்யச் சென்றார். அரங்கனோ, 'தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருட பள்ளி கொண்டிருக்கிற நமக்குத் தாபம்(வெப்பம்) இல்லாமையால் இங்கு உமது திருத்தொண்டு பயன்படாது ' எனக்கூற, அங்கிருந்து நேரே மந்திபாய் வடவேங்கட மாமலைக்குச் சென்றார். வேங்கடவனுக்கு அத்திருத் தொண்டு புரிய முனைந்த போது, அப்பெருமானும் குளிரருவி வேங்கடத்தில் எப்போதும் குளிர்ந்து நிற்கும். நமக்கும் இத்தொண்டு பயனற்றது. ஆகவே அயமேத வேள்வியில் அவதரித்த அத்திகிரி அருளாளப் பெருமாள் எப்போதும் வெப்பத்தால் தகித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு இத்திருத் தொண்டு இதமளிக்கக் கூடியதாக இருக்கும். அங்கே சென்று தொண்டு புரிவீராக' எனத் திருவாய்மலர்ந்து கூற திருக்கச்சி நம்பிகளும் அத்திகிரி அருளாளப் பெருமானின் அனுமதி பெற்று அவருடைய திருவடிவாரத்திலேயே திருவாலவட்டமும் கையுமாய் ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி அத்தாணிச் சேவகம் செய்துவந்தார்.

தினமும் பூவிருந்தவல்லியிலிருந்து ஸ்ரீபெரும்பூதூர் வழியாக காஞ்சி சென்று எம்பெருமானுக்கு ஆலவட்டத் திருத்தொண்டு புரிந்து காஞ்சிபூரணர் ஆனார்.

இளையவராய் இருந்த இளையாழ்வார் இராமானுசரிடத்தில் அன்பு கொண்டு அவரிடம் சிறிது நேரம் அளவளாவிச் செல்லது வழக்கம். அவருடைய அறிவுத் திறத்தையும் பக்தி மேலீட்டையும் கண்டு, நெஞ்சைப் பறி கொடுத்த இராமானுசர், திருக்கச்சி நம்பிகளின் திருவடிகளில் ஆச்ரயித்து உய்வு பெறவேண்டுமென விரும்பினார்.

அவரையே குருவாகக் கொள்ள விரும்பினார். ஆனால் திருக்கச்சி நம்பிகளோ தம் இயலாமையைக்கூறி தாம் நாலாவது வருணத்தைச் சேர்ந்தவர் என்றும், ஆசிரியராக இருக்கும் தகுதி தனக்கில்லை என்றும் கூறி மறுத்து விட்டார்.

"வானுளார் அறியலாகா வானவா என்பராகில்
தேனுலாம் துளபமாலைச் சென்னியாய் என்பராகில்
ஊனமாயினகள் செய்யும் ஊனகாரர்களேனும்
போனகம் செய்தசேடம் தருவரேல் புனிதமன்றே"
(திருமாலை 41)

என்னும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாசுரத்தின்படி, இராமானுசர் எப்படியாவது திருக்கச்சி நம்பிகளின் உச்சிட்டத்தைத் (உண்டுமிகுந்த உணவை) தாம் பெறவேண்டும் என ஆசை கொண்டார். அவரைத் தம் இல்லத்திற்கு விருந்துண்ண அழைத்தும் தாம் நினைத்தபடி நடக்காமல் போனது குறித்தும் இராமானுசர் வருத்தம் கொண்டார்.

தம் மனதில் நீண்டகாலமாக சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டி திருக்கச்சி நம்பிகளிடம் விண்ணப்பிக்க, திருக்கச்சி நம்பியும் என்ன சந்தேகம் எனக் கேட்காமல், சமயம் பார்த்துப் பேரருளாளப் பெருமானிடம் கேட்டுச் சொல்வதாகக் கூறினார்.

இராமானுசர் மனத்தில் நீண்டகாலமாக துளைத்துக் கொண்டிருந்த வினாக்களுக்கு,

அஹமேவபரம்தத்வம்:- நானே மேலான உண்மைப் பொருள்.

தர்சனம் பேதயேவச:- ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு வேறானவை.

உபாயேஷஶ ப்ரபத்தி ஸ்யாத்:- சரணாகதியே மோட்சத்திற்கு உத்தம உபாயம்.

அந்திம ஸ்மிருதி வர்ஜனம்:- உத்தம உபாயத்தைக் கொண்டவர்க்கு உயிர்போகும் தருவாயில் இறைவனைப் பற்றிய நினைவு வேண்டாம்.

சரீரே அவஸாநே முக்தி"-உத்தம உபாயத்தைக் கொண்டவர்க்கு மரணத்திற்குப் பிறகு முக்தி கிடைக்கும்.

மஹாபூர்ண ஸமாரஸ்ய:- மகாபூரணரான பெரியநம்பியை ஞானாசிரியராகக் கொள்ளவேண்டும்.

என்னும் ஆறு வார்த்தைகளை பேரருளாளரின் திருவுள்ளமாக இராமானுசர் திருக்கச்சி நம்பிகளின் மூலம் தம் மனதிலிருந்த சந்தேகங்ளான

உண்மைப் பொருள் எது?
ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றா?
மோட்சத்திற்குரிய சிறந்த சாதனம் எது?
அந்திமகாலத்தில் இறைவனைப் பற்றிய நினைவு வேண்டுமா?
மரணத்திற்குப் பிறகு யாருக்கு முத்தி கிடைக்கும்?
யாரை ஞானகுருவாகக் கொள்வது?
என்னும் ஆறு சந்தேகங்களுக்கு இராமானுசர் விடை பெற்றார்.

பேரருளாளப் பெருமானுக்குத் தம் இறுதிக்காலம் வரை அணுக்கத் தொண்டு புரிந்த திருக்கச்சி நம்பிகளின் திருத்தாள் பற்றி உய்வோமாக!

பாதரசம்

அண்ணாமலை சுகுமாரன்

புதன் கிழமைக்கு ஆங்கிலத்தில் வெட்னெஸ் டே என்றாலும் அது *MERCURY* எனும் கிரகத்தின் குறியீடாகத்தான் கருதப்படுகிறது. மெர்குரி என்பது கடவுளர்களின் தூதுவராக கிரேக்க ரோமசனிய புராணங்கள் கூறுகின்றன. அதற்கு இறகுகள் இருப்பதாகவும் அது விரைவில் பயணம் செய்யக்கூடியயது என்று விவரிக்கிறது .

புதன் கோள் சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோளாகும். மேலும் இது சூரியக் குடும்பத்தில் மிகச்சிறிய கோளாகும். இது ஒரு முறை சூரியனைச் சுற்றி வர *88* நாள்கள் எடுத்துக்கொள்கிறது. புவியிலிருந்து காணும்போது இது *116* நாட்கள் எடுத்துக் கொள்வதைப் போலத் தோன்றும். இதற்கு இயற்கை நிலவுகள்எதுவும்அறியப்படவில்லை என்கிறது விக்கிப்பீடியா

புதன் எனும் கோளிற்கும் மெர்குரி எனும் பொருள் எவ்வாறு வந்திருக்கும் இதை பாதரசம், சூதம் என்றும் ரசம் என்றும் தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் தெரிவிக்கிறது பாதரசம் *118* மூலகங்களில் ஒன்று.

அது சிவனின் விந்து எனவும் நமது மருத்துவம் விவரிக்கப்படுகிறது சிவனான ரசமும் சக்தியான கந்தகமும் சேரும்போது அது லிங்கம் என்ற வேறுஒரு வீரிய பாடாணம் கிடைக்கிறது என்கிறது தமிழ் மருத்துவம்

30,000 ஆண்டுகளுக்கு முன்னரே, ஆதி மனிதர்கள் ஸ்பெயின் குகைகளில் சின்ன பார் எனப்படும் மெர்குரி சல்பைடை *(Mercury sulphide)* வண்ணம் ஏற்றப் பயன்படுத்தினர். என்பதற்கு தொல் சான்றுகள் கிடைக்கின்றன

குர்னா *(Kurna)* என்னும் எகிப்திய நகரில் *3,600* ஆண்டுகளுக்கு முன்னர் பாதரசம் பயன்படுத்தப்பட்டது. அதை தேங்காய் வடிவக் குடுவையில் வைத்து இருந்தனர்.

சின்னபார் *(Mercury sulphide)* என்னும் சிவப்பு நிற உப்பை உருக்கி பாதரசம் எடுத்ததை சீன ரசவாதி கு ஹோங் *(281-361)* எழுதிவைத்துள்ளார்.

அரிஸ்டாடில், ப்ளினி ஆகியோரும் இதை அறிந்திருந்தனர். ரோம் ஆண்டுதோறும் *4* டன் பாதரசத்தை வாங்கியதாக ப்ளினி கூறுகிறார்

ஸ்பெயின் நாட்டிலுள்ள அல்மேடன் சின்னபார் சுரங்கம் 2500 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டது.

தென் அமெரிக்காவின் இன்கா (Incas) நகரீகம் இதை அழகு சாதனப் பொருளாகப் பயன்படுத்தியது.

இத்தகைய ரசத்தை மருத்துகளாக்கி, உண்ணும் பொருளாக்கி உடல் பிணிப்போக்கி , உயிர் வளர்க்கும் முறையை தமிழர் அறிந்திருந்தனர்

இன்னமும் ரசத்தை உண்ணத்தக்க அளவில் நஞ்சு நீக்கி சுத்தி செய்யும் முறையும் , செயற்கையாக வாய்ப்பு ரசம் லிங்கம், வீரம் போன்றவற்றில் இருந்து பிரித்தெடுக்கும் முறையும் , மற்றும் வெற்றிலையில் இருந்தும், உப்பளங்களில் இருந்தும் ரசம் எடுக்கும் முறையை நாம் அறிந்திருந்தோம்.

அதை அப்போது உலகம் அறிந்திருக்கவில்லைஎன்பது நிச்சயம். ஆனால் உலக அரங்குகளில் இந்த செய்திகளைக்கொண்டு சேர்க்க வேண்டியது நமது கடமை. ரசத்தைக்கொண்டுரசப்பற்பம், ரசசெந்தூரம், ரசகந்தி மெழுகு போன்ற உயரிய மருந்துகளின் செய்முறை நமது வழக்கத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது



17 நூற்றாண்டில் தரங்கம் பாடி வந்த சீகன் பால்க் இவைகளை தொடர்ந்து பதிவு செயகிறார். நமது குறையே ஆய்வு உலகில் இதனை நிறுவ தக்க சான்றுகள் இல்லாது தவிக்கிறோம் . பல் நாடுகளில் பண்டைய மரபு மதிக்கப்ப்டுகிறது இங்கோ அதை மதிப்பார் மிகவும் குறைவு .

இத்தகைய பல செய்திகளின் விதையை நான் எனது சித்த மருத்துவ ச் சிந்தனைகள் எனும் நூலில் விவரித்துள்ளேன் .அதன் தொடர்ச்சியும் எழுத வேண்டும். ரசத்தைப்பற்றி நாம் அறியவேண்டியது நிறைய இருக்கிறது .

ரசம் மருத்துவத்திற்கு ஆதாரம். ரசவாதம் என்பதும் இது குறித்ததே ரசத்தின் அணு எண் 80 தங்கமோ அணு எண்79.

இலக்கிய உத்திகளும் எடிட்டிங் நுட்பங்களும்

எடிட்டர் தேவராஜ்

...பிரியவாசகர்களே இது வரையில் நாம் திரைநுட்பங்களாக எடிட்டிங்கில் உருவத்தை பார்த்தோம்.ஒவ்வொரு எடிட்டரும் பின்பற்றும் நுட்பங்களைக் கண்டறிந்தோம்.(screen direction (டிரெக்ஷன்) ட்ரான்சிஷன்ஸ் (transitions) வழியில் crosscutting (கிராஸ் கட்டிங்), cut away (கட் எவே) டிஸ்ஸோல்வே(dissolve) பாஸ்ட் கட்டிங் (fastcutting) இன்செர்ட் (insert)jumpcut (ஜம்பகட்) ல் cut (கட்) மச்சகட்(matchcut) ஸ்மாஷ்சுட்(smashcut)sequencecut (சிக்குவேன்ஸ்காட்) slowcutting (ஸ்லோகட்டிங்o)wipe (வைப்) fadein (பேடின்)பெடியட்(பேடவுட்)irishin (ஐரிஷ் இன்)ஐரிஷ் அவுட்(irish out)super impose (சூப்பர் இம்போஸ்) cutting on action (கட்டிங் ஆன் ஆக்ஷன்) Eyelinematch (ஐ லைன்மேட்ச்)மேட்ச் ஆன் ஆக்ஷன் (match onaction) மேட்சிங் டோன் (matching tone) பாயிண்ட் ஆப் வியூ ஷாட்

(point of view shot)ரெவெர்சே ஷாட்(reverse shot) 180DEGREE IMAGINARY லைன்(

180DEGREE IMAGINARY LINE)AB ROLL ASSEMBLY (அபி ரோல் அசெம்பிளி) டூ ஷாட்

TWO SHOT) த்ரீஷாட்(THREESHOT)எலிப்டிக்கல் எடிட்டிங் (ELLIPTICAL EDITING)

ஓவர்லாப்பிங் எடிட்டிங்
(OVERLAPPINGEDITING)பபர்ஷாட்(BUFFERSHOT)CHE AT SHOT

(சீட் ஷாட்)AXIAL CUT (எக்ஸிஅலசுட்)இப்படி செய்முறையில் எடிட்டர் பின்பற்றும் செய்முறை எடிட்டிங் வழிகள் பலவற்றை நாம் பார்த்தோம் . எடிட்டரை தவிர இன்னொருவரும் திரைக்கதையில் இலக்கிய உத்திகளை கடைப் பிடித்து திரைக்கதிர்ஆசிரியர் திரைக்கதையின் உருவத்தில் உள்ளடக்கத்தில் சில வழி

முறைகளை பின்பற்றுவார்.அவற்றுள் சில எஸ்டாபிளிஷிங் ஷாட் சீன்(ESTABLISHING SHOT ,

SCENE ,பிளாஷ் பெக் (FLASHBACK)பிளாஷ் போர்வேர்ட்(FLASH FORWARD) MONDAGEமோன்டாஜ்(MONDAGE) CHANGE IN IMAGESIZE AND ANGLE (சாஞ்சு இன்இமேஜ் சைஸ்)இடம் ,காலம் இணைத்தல் ,SOUNDFLOW OVER CUT (சவுண்ட் ப்ளோ ஓவர் கட்)

பரல்லேல் கட் (PARALLELCUT) டெம்போ(TEMPO) பசிங் (PACING)RHYTHM (ரிதம்)

மிஸன்ஸின் ,மிஷனஷட் (மிஷனஷட்)என்று இவை எல்லாம் திரைக்கதிர் ஆசிரியரும் எடிட்டரும் இணைந்து செயல் புரிவதில் திரைப்படம் முழு உருவத்தை அடைவதை நாம் தெரிந்து கொள்ளலாம் .

முதலில் நாம் M .G . R இன் புகழ் பெற்ற சரித்திரப்படம் ஆயிரத்திலொருவன் படத்தில் எப்படி இலக்கிய உத்திகளும் எடிட்டிங் நுட்பங்களும் செயலாற்றுகின்றன என்பதைக் காண்போம் .ஆயிரத்திலொருவன் பட இயக்குனர் B .R .பந்துலு .எடிட்டர் R .தேவராஜன்

திரைக்கதிர் ஆசிரியர்
கே.ஜே.மகாதேவன் .வசனம் .SANMUKAM.R.K.

படத்தின் ஆரம்பத்திலேயே அழகாக M .G .R .ஒரு மருத்துவ பரிசோதனையில் ஈடுபட்டு வெற்றி அடைவதை கே.ஜே.மஹாதேவன் திரைக்கதையில் ESTABLISHING SHOT அறிமுகப்படுத்தும் காட்சியாக படைத்துள்ளார் அத்துடன் அவருக்கு சப்போர்டிங் ஆர்ட்டிஸ்ட் SUPPORTING ARTISTE உதவும் நட்சித்திரமாக நாகேசையும் காட்டிவிடுவார் . இத்துடன் சர்வாதிகாரியையும் எதிர்த்து போராடும் மக்களையும் முதல் காட்சியிலேயே காட்டி விடுவார் . இதைத் தொடர்ந்து வரும் காட்ச்சியில் INSIGHTING இன்சிடெண்ட்காட்சியை கதை வளர்த்ததூண்டும் நிகழ்ச்சியை காட்டுகின்றனர்.மருத்துவரையும் மக்களோடு அடிமைகளாக

கைது செய்து காட்சியை வளர்க்க தூண்டி கதை வளர் வழி செய்துள்ளார் கே.ஜே.மஹாதேவன் திரைக்கதை ஆசிரியர்.கூடவே சர்வாதிகாரியின் கொடூரத்தை தெரிவிக்க R .K .சண்முகம் எழுதிய 'உனது அதிகாரமென்ன சிலப்பதிகாரமா நிலைத்து நிற்க 'என்று கூறிஎதிர்காலத்தில் வீழ்ச்சி நடை பெறப்போவதை FORSHADOWING எபக்ட்வழியில் காட்டிவிட்டார் ஷண்முகம்.

பருவம் எனது பாடல் என்ற பல்லவி கொண்ட பாடலைப் பாடி வருவதாக கதாநாயகி ஜெயலலிதாவை காட்டுகின்றார் இயக்குனர் பந்துலு வாலியின் பாடல் கதாநாயகியின் இளமை,ஆசை,குறிக்கோள் முதலியவற்றை காட்டி நாயகியின் கதாநாயகியின் கதாபாத்திரத்தின் குணவளர்ச்சியை தெளிவாக காட்டிவிட்டார் கவி வாலி அவர்கள்.

பாடலில் நாயகியின் குணச்சித்திரத்தை காட்டியவர்கள் அடுத்த காட்சியில் பார்வையிலேயே நாயகனை விரும்புவதாக காட்டுகின்றார்.பந்துலு.அதட்கு கதை சொல்லும் வசன காட்சியாக VERBAL CULTURE பின்பற்றாமல் காட்சி ரூபத்தில் VISUAL CULTURE

முறையில் பூங்கொடியின் காதலுக்கு விதை விதைக்கிறார்.அதுதானே PAY IN எனும் இலக்கணம் திரைக்கதையில் .

கதை வளர்ச்சிக்காக காட்சியின் இறுதியில் ஏன் ? ஏன்?என்று அடிமைகள் செங்கப்பனிடம் கேள்வி கேட்பதாக காட்டி அடுத்து நாயகன் பாடும் பாடலுக்கு ஆரம்ப பல்லவியே

ஏன் என்று கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை நான்

என்ற எண்ணம் கொண்ட மனிதன் வாழ்ந்தது இல்லை .....என்று கதையை வளர்க்கப் பயன்படும் கருவியாக பாடலை பயன்படுத்தி உள்ளார் பந்துலு.

மரம் வெட்ட ஆரம்பித்து அதைத்தொடர்ந்து பூங்கொடியின் காதல் வளர் வதாகக் காட்டி VISUAL CULTURE க்கு தொடர்ந்து அஸ்திவாரம் அமைக்க முயலும் பந்துலு சாரின் திறமையைப் பாராட்டியே ஆக வேண்டும். M .G .R ஐ ஜெயலலிதா தன்மாளிகைக்கு வர அழைக்கும் காட்சியில் அவர்கள் பேச்சுக்கு எதிர் ஏக்சன் புரிவது போல மற்ற அடிமைகளைக் காட்டும் ஐடியா ACTION REACTION EDITING ஆரம்பிக்கிறார் எடிட்டர் தேவராஜன்.அதட்கு

வசனத்தை எழுதி வழி அமைத்தவர் வசனகர்த்தா ஷண்முகம் அவர்கள்.அவர் உதவி இயக்குனராகவும் பணிபுரிந்து கதை வளர்ச்சிக்கு வசனம் கை கொடுப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.மேலும் பூங்கொடி நாயகன் மணிமாறனைச் சந்திக்க நினைப்பதை உதவி செய்யும்.மாதவி சொல்லும் வசனம் " கதை எங்கேயோ போய் எங்கேயோ முடியப்போகுது"என்று நினைக்கிறேன் என்று கூறுவது முடிந்தவரை கதையை வளர்க்க முயல்வது தெரிகிறது.இவை அனைத்தும் M G R இன் ஆலோசனை ,அனுமதி பெற்ற பின்பே படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது என்பது நாம் தெரிந்து கொள்ளவேண்டிய செய்தி ஆகும்.

அடுத்து வரும் காட்சியில் நாயகி நோயாளியாக நடிக்கிறாள். அந்த காட்சியில் நோயாளியைப் பார்க்க மருத்துவர் வரவேண்டியதாக காட்சி அமைத்து மீண்டும் பூங்கொடி மணி மாறனிடம் காதலை வெளியிடுகிறாள் .நாயகன் காதலை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையை பாடலில் பந்துலு இயக்குனர் காட்டுகின்றார் ." ஓடும் மேகங்களே ஒரு சொல் கேளீரோ " என்று தொடங்கும் பாடலில் பாடலாசிரியர் அந்த நாயகனின் நிலையை அழகாக காட்டி தானும் நல்ல கதை சொல்லியாக மாறி நிட்கின்றார் கவியரசு கண்ணதாசன்.

நாடாளும் வண்ணமயில் காவியத்தில் நான் தலைவன்

நாட்டிலுள்ள அடிமைகளில் ஆயிரத்தில் நான் ஒருவன்.

மாலிகையே அவள் வீடு மரக்கிளையில் என் கூடு

பாடுவதே என் பாடு

இதில் நான் அந்த மான் நெஞ்சை நாடுவதெங்கே கூறு

என்று தன் நிலையை நாயகன் பாட்டில் காட்டுகின்றார் .தன்னால் காதலை ஏற்க முடியாது என்று தன் நிலையைக் காட்டுகின்றார் . இன்னும் அடுத்து

ஊரெல்லாம் தூங்கையிலே விழித்திருக்கும் என் இரவு

உலகெல்லாம் சிரிக்கையிலே அழுதிருக்கும் அந்த நிலவு

பாதையிலே வெகுதூரம் பயணம் போகின்ற நேரம்

காதலை யார் மனம் தேடும்

இதில் நான் அந்த மான் நெஞ்சை நாடுவதெங்கே கூறு

என்று அவளுக்கு அடுத்த கட்டத்துக்கு பிளாஷ் பார்வேர்ட் FLASHFORWARD முறையில் பதில் சொல்வதாகக் காட்டுகின்றார் பந்துலு.நாயகன்,நாயகியை இருவரையுமே மாற்றி மாற்றி காட்டி உணர்வுக்கோலத்தை வெளிப்படுத்துகின்றார் இருவர் பங்கு கொள்ளும் இருவர் ஷாட்ஸ் TWOSHOTS டெக்னீக்கை காட்டி எடிட் செய்துள்ளார் எடிட்டர் தேவன்

காட்சியில் விலகிச் செல்லும் நாயகனின் அமைதியான ஷாட்டில் SILENTSHOT

மீது "நில்லுங்கள்"என்ற வார்த்தையை நாயகன் மீது சவுண்ட் ஓவர் லேப்பிங் கட்டிங் SOUND

OVERLEPPINGCUT செய்து ஷாட் டின் SHOT இன் நீளத்தைக் குறைத்து வேகத்தை கதையின் வளர்ச்சிக்கு வடிவம் அமைக்கிறார்கள் எடிட்டரும் இயக்குனரும் .இங்கே இருவரின் உரையாடலை தடுத்து நிறுத்தி ரசிகர்களின் ஈடுபாட்டை கவர்கிறார் கள் மக்களை திடுக்கிட வைக்கும் SHOCKCUTTING வகையில் வில்லன் நம்பியார் அறிமுகப்படுத்தப்படுகிறார் .அவர் ஒரு கொள்ளைக்காரன் .அதிர்ச்சி வைத்தியம் பயன் தரும் காட்சி வளர்ப்பு பதமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது

அடுத்து வரும் காட்சியில் நாயகனும் வில்லனும் சண்டைக்காட்சியில் களத்தில்

உள்ள பொருட்களை (BELONGING TO THESCENE) பயன்படுத்திக்கொண்டு இரும்புச்சங்கிலி ,மணல்,தீ கொண்டு காட்சி அமைக்கப்பட்டு இருப்பது மேட்ச் கட்செய்து FAST CUTTING முறையில் டெம்போவை டெம்போவிரைவுபடுத்தி உள்ளார்கள்.

இப்படி படிப்படியாக காட்சிகளை இணைத்து வளர்ப்பது கதை சொல்லலில் ADDITIVE PRACESS என்று சொல்வதுண்டு.இதட்கு எடிட்டரின் கைநேர்த்தி ரிதம்.பேஸ்.சரியாக செயல்படுவது மூலம் TOTAL STRUCTURIL MOOD சரியாகச் செயல் படுவது EFFECT UPON AUDIENCE என்ற நிலை சரியான விளைவை உண்டாக்கும். காட்சியின் உள்ளடக்கத்துக்கு ஏற்றாற்போல ரிதத்தைகையாண்ட எடிட்டரின் திறமையை நாம் போற்றவேண்டும்.

அடுத்துவரும் உன்னை நான் சந்தித்தேன் நீ ஆயிரத்தில் ஒருவன் என்ற பா. டலில் பூங்கொடியின் வருத்தத்தை காட்டுவது இடையில் நம்பியார் உதவுவதாக சிறு உரையாடலை காட்டி அவனது நாட்டிட்கு அலையத்துச்சென்று அடிமைகளாக அமர்த்துவது என்று ADDITIVE PROCESS முறையில் காட்சி அமைத்து கதை உணர்வோடு ரிதம் சரியாக EDITOR எடிட் செய்துள்ளார்.

CONFLICT முரண்பாடு என்பது மனோகர்.ராமதாஸ் . நம்பியார் ,M .G .R இவர்களுக்கு இடையே இருந்தது.இப்போது கதையில் M .G .R .க்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே ஏட்படுவதாக கதை பின்னப்பட்டு சொல்லப்படுகிறது.முரண்பாட்டை முடிக்கும்வண்ணம் M .G .R ஜெயலலிதாவை தனது பாசறையில் ஜெயலலிதாவை அமரும்படி

முயலும்போது நாயகனுக்கும் வில்லனுக்கும் ஜெயலலிதாவை யார் மணப்பது என்று புது தகராறு உண்டாகிறது.

அடுத்த காட்சியில் கேள்வி பதில் கட்டிங் பயன்படுத்தப்படுகிறது.அடிமையை விலைக்கு வாங்க யாரிடமும் பணம் இல்லை என்று நம்பியார் சொல்ல அதட்கு பதிலாக நான் அப்படி பணம் உள்ள மனிதனை உருவாக்குகிறேன் என்று அவர் மனைவி சொல்வதாக காட்சி .கேள்விக்கு பதில் தருவதாக கேள்வி பதில் கட்டிங் என்பது RELATIONAL EDITING.இது நாடகமொழியில் இருந்து திரைக்கு வந்த ஒரு அம்சம் ஆகும்.

அடுத்து வரும் காட்சியில் எல்லோருக்கும் முன் நாயகி நடனம் ஆடுகிறாள்.ஆடாமல் ஆடுகிறேன் என்ற சோகப்பாடலில் ஜெயலலிதாவின் முகபாவனைகள் DIFFERENT ANGLE DIFFERENT ஷாட் என்று வழிமுறையை பந்துலு பயன்படுத்தி உள்ளார்.SPECIALEFFECTS பயன்படுத்தாமல் நேரடியாக DIRECT CUT செய்து SONG

எடுத்துள்ளார் .இங்கே MATCHCUT அல்லது மேட்சிங் ON ACTION என்று விதிமுறைகள் எதையும் அவர் பயன்படுத்தாமலே DIRECTCUT முறையில் SONGKATCHI எடுத்துள்ளார்

இதைத்தொடர்ந்து பூங்கொடி யை தன் வீட்டிட்கு அதிக விலை கொடுத்து பெற்றுக்கொண்டு அழைத்து வருகின்றான். கதாநாயகன்.அதட்கு உதவி செய்தது நம்பியாரின் மனைவி விஜயலக்ஸ்மி .மீண்டும் கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் சண்டை .ஜெயலலிதா தனக்கு வேண்டும் என்று தொடரும் சண்டை.இறுதியில் சட்டப்படி நாயகனும் நாயகியும் கணவன் மனைவி ஆகிவிட்டோம் என்று இருவரும் நடிக்க கடுமையாக வாழ்த்திவிட்டு நம்பியார் வெளியேறுதல்.இந்த காட்சியில்

காட்சியின் முக்கியத்துவத்துக்கான DIFFERENTSHOTS-டிபிபிநேன்ட் IMAJE

சைஸ் என்று கதை சொல்லும் ஷொட்ஸ்களை இணைத்துள்ளார் எடிட்டர் தேவன்.

மீண்டும் மணிமாறனும் பூங்கொடியும் ஒரே அறையில் படுத்து தூங்கும் காட்சி .இருவரும் பிரிய நாயகியை விட்டு நாயகன் விலகிச் செல்கின்றான்.இங்கே வசனத்தில் காட்சி பிறக்காமல் காட்சி மூலம் VISUAL APPROCH வழியில் பந்துலும் தேவனும் வெளிப்படுத்தி உள்ளார்கள்.மனம் மாறிய,பூங்கொடி மணிமாறனை மணக்க கோரி நிற்க மணிமாறனை ஏமாற்றி

மணமுடித்தல் என்று கதையை வளர்த்து செல்கிறார்கள் ஆனால்,ACTION REACTION அழகாக எடுத்துள்ளார் பந்துலு."நாணமோ,இந்த ஜாடை நாடகம் என்ன?என்று இருவரும் ஆடிப்பாடுகிறார்கள் .இடை இடையே நம்பியார் பார்ப்பதாக REACTION ஷாட்,மிக பொருத்தமாக படைத்து ரசிகர் மனதில் தாக்கத்தை ஏட்படுத்துகின்றார்கள் பந்துலுவும் தேவனும் .

மணிமாறனைக் கொல்ல நம்பியார் போட்ட சதித்திட்டத்தை அவரது மனைவியே தடுத்து நிறுத்தவே மீண்டும் மணிமாறனும் நம்பியாரும் சமாதானம் அடைந்து பாடும் பாடல் .

""அதோ அந்தப் பறவை போல வாழவேண்டும்

இதோ இந்த அலைகள் போல ஆடவேண்டும் ""
இந்தப்பாடல் கப்பலில் ஆள்கடலில்

வரும்போது பாடும் பாடல்.பாடல் ஆரம்பிக்குமுன்னரே கடல் பறவைகளை இன்ஸெர்ட்,insert

ஷோட்போட்டு பாடலை ஆரம்பிப்பார் எடிட்டர் தேவன் .insert ,ஐடியா அழகாக பயன்படுத்தி இருப்பார் எடிட்டர் தேவன்.

மீண்டும் பழைய விரோதி மனோகருக்கும் m .g .r .க்கும் சண்டை புரிதல்.இங்கே பயன்படுத்தப்பட்ட டெக்னீக் flutter கட்டிங் என்று சொல்லலாம் . விதவிதமான ஆட்கள் விதவிதமான சண்டை இடுதல்.பின் சுகமான கிளைமாக்ஸ்.மக்கள் எல்லோரும் மணிமாறனை மன்னனாக்க நினைக்கிறார்கள்.ஆனால் மணிமாறன் மக்களுக்கு சேவை புரிவதே தன்நோக்கம் என்று மருத்துவராக மாறுவது unexpected கிளைமாக்ஸ்,ஸ்கிரிப்ட்-இல் இது இவ்வாறு கூறப்படம்.இதையே எடிட்டிங்கில் shockcutting என்பர்.இதையே shocktreatment

என்றும் சொல்வர்.ஆனால் ஆயிரத்தில் ஒருவன் என்ற டைட்டில்,க்கு பொருத்தமானதாக அந்த title

பாராட்டப்பெற்றது எல்லோரும் அறிவர்.

இப்படி கதை சொல்வதில் மிகவும் effect upon audience ரசிகர்களை திருப்தி படுத்தும் ஜனரஞ்சக கதை சொல்லியாக திறம்பட ஆயிரத்திலொருவன் விளங்குகின்றான்.படத்தின் வடிவம் உருவம் திறன்மிக்க நாடகமொழி அம்சங்களை கொண்டு

ஸ்கிரிப்ட் பின்னப்பட்டு திரையில் படைக்கப்பட்டது . ஆனால் திரையில் நாடகமொழியைத் தவிர்த்து திரைமொழியை படைக்க முயட்சி எடுத்ததாக எண்ண முடியவில்லை . கதை சொல்லலில் நேர்த்தியாக எடிட்டிங் கைகோர்த்து பயணிக்கிறது. பாடல்களும் இசையும் போட்டி போட்டுக்கொண்டு அருமையான நாடகம் மிளிறு திரை வடிவத்திட்கு உதவி புரிகிறது.

இறுதியில் திரைமொழியைத் தழுவி நிட்கும் வலி தான் என்ன என்று நம்மை நமே கேட்டுக்கொண்டால் நாடகமேடையை விட்டு திரை அரங்கை நாம் மாற்றம் பெரும் நிலை அடையலாம். அவற்றை சுருக்கமாக நாம் காண்போம் .

.1 .தேர்ந்தெடுத்தல் ஷாட்ஸ்,sceneselection

உ.ஷாட் sceneplan ,செய்த பிறகு திரைவடிவமைப்பு structuring

3 .சமநிலைப் படுத்துதல் சரியான அழுத்தம் தரப்பட்டு கதைப்பொருளின்

உள்ளீடான நாடகம் திரைச்சுவை கூட்டவேண்டும் .

4 .உணர்வு மாற்றங்கள் ஒவ்வொரு காட்சியில் வெளிப்பட்டு டோடல்,வடிவத்தில்

மெருகேற்றி அழகியல் உருவத்தை அடையும் .

5 ஒவ்வொரு கட்டும் உட்கருத்தை கருப்பொருளை ஆழப்படுத்தவேண்டும்.

6 .ரசிகர்களின் ஈடுபாட்டை கருப்பொருளை நோக்கி செலுத்துதல் முக்கியம்

7 காட்சியில் ஷாட்டுகளின் அளவு நீளம் pacing ,rhythm ,படத்தின் லயம் என்பது

total structure -உடன் ஹார்மோனி harmony ,யோடு அமையவேண்டும்.

இவைகளைத் தவிர்த்து படம் தயாரிக்கப்பட்டால் நாடகமொழி தான் நம்மை

வந்து அடையும் . திரைமொழி நம்மை விட்டு அகன்று விடும்

இனி அடுத்து எங்கவீட்டுப்பிள்ளை படத்தில் நாம் கற்றுக்கொள்வோம்.

Hutha

Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765

உறுப்பினர் கட்டணம்

ஆண்டுச் உறுப்பினர் கட்டணம்.....1200/–
அரையாண்டுச்உறுப்பினர் கட்டணம் ..... ரூ. 600/–
அன்பளிப்பு ரூபாய் 120/–

தனிச்சுற்றுக்கு மட்டும்